NEW MASTER INSTITUTE
B.M.C LANE,
241, NAVALAR ROAD,
JAFFNA.
A/L
WEEKEND
Paper Class
ஆரம்பம்:
10 — 02 — 90
SATURDAY — 8.30 a m

பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ 3/50

NEW MASTER INSTITUTE
B.M.C Lane, Jaffna
90 A/L
Day Classes
நடைபெறுகின்றன
★ நேர அட்டவணையை அலுவலகத்தில் பெறலாம்

சுடர்: 5 சுக்கில வருடம் தை மீ 25 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1410 ஸபர் பிறை 10 (07 - 02 - 1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 3

## ஈழத்திலிருந்து ஆயுதங்கள் கடத்தல்:

# தமிழக கரையோரப் பகுதியில் கடும் பாதுகாப்பு நடவடிக்கை!

## தமிழ்நாடு அரசு ஏற்பாடு

சென்னை, பெப்ரவரி 7

ஈழத்திலிருந்து பெருமளவு ஆயுதங்களைக் கடத்தி வந்து இந்தியாவில் சட்டவிரோதக் நடவடிக்கைகயிலும், ஆயுத விற்பனையிலும் ஈடுபடுவதற்கு, சில தமிழ் குழுக்கள் முயற்சித்து வருவதாக கிடைத்துள்ள தகவல்களை அடுத்து தமிழக கரையோரப் பகுதியில் பாதுகாபபு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தபபட்டிருக்கின்றன.

தமிழ்நாடு அரசு இது தொடர்பாக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திருப்பதாக இந்தியப் பத்திரிகை வட்டாரங்கள் தகவல் வெளியிட்டிருக்கின்றன.

ஈழத்தைச் சேர்ந்த சில குழுக்கள் பெருமளவில் ஆயுதங்களைத் தமிழகத்திற்குள் கடத்தி வரும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதாக அந்தத் தகவலில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த முயற்சியைத் தடுப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகள் தமிழகத்தில் அவசர அவசரமாக எடுக்கப்பட்டிருக்கின்றன.

★ கரையோர கடற்பிரதேசத்தில் ரோந்து நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்துதல்.

★ கரையோரப் பிரதேசங்களில் உள்ள கேந்திர இடங்களில் கண்காணிப்புக் கோபுரங்களை (Watch Tower) அமைத்தல்.

★ கரையோரப் பகுதிகளைக் கண்காணிப்பதற்காக பொது மக்கள், படையினர் அடங்கிய விழிப்புக் குழுக்களை உருவாக்குதல்.

★ கரையோரத்தை அண்டிய பகுதிகளில் வீதி...

( 6 ஆம் பக்கம் பார்க்க )

## இந்திய - பாக். யுத்த ஆபத்து!

புதுடில்லி, பெப். 7

இந்திய - பாகிஸ்தான் எல்லைப் புறத்தில் பெரும் பதற்ற நிலை ஏற்பட்டிருக்கிறது.

இருதரப்பினருக்கும் இடையில் யுத்தம் உருவாகக் கூடிய ஆபத்து ஏற்பட்டிருப்பதாகவும் அரசியல் அவதானிகள் தெரிவித்தனர்.

இதேவேளை-

சர்வதேச எல்லைக் கோட்டை மீறி காஷ்மீருக்குள் பாகிஸ்தானியர்கள் பிரவேசிக்க முயற்சித்ததை இந்தியா பலமாகக் கண்டித்திருக்கிறது.

இது தொடர்பாக இந்திய அரசு பாகிஸ்தானுக்கு ஆழ்ந்த கவலையை தெரிவித்திருக்கிறது.

நேற்று முன்தினம் பிற்பகல் சுமார் 4 ஆயிரம் பாகிஸ்தானியர் இந்தியப் பகுதிக்குள் நுழைய முயன்றனர். அம் முயற்சியைத் துப்பாக்கிப் பிரயோகம் செய்து இந்தியப் படையினர் முறியடித்தனர். இது பற்றிய செய்தி நேற்றைய உதயனில் வெளியானது தெரிந்ததே.

இது சம்பந்தமாக பாகிஸ்தான் தெரிவித்த குற்றச்...

( 6 ஆம் பக்கம் பார்க்க )

### முச்சந்தி முரளி



உவர் டிஸ்கிற்றர் போற இடமெல்லாம் தொல்லைதான் கண்டியளோ.....!

## 1,800 மாணவர் இன்னும் தடுப்புக் காவலில்

தென்பகுதியில் அரச எதிர்ப்பு நடவடிக்கைகளில் கலந்துகொண்டதற்காக கைதான மாணவர்களில் இன்னும் 1800 பேர் தடுப்பு முகாம்களில் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சுதந்திர தினத்தை ஒட்டி சுமார் 340 மாணவர்கள் இம் முகாம்களில் இருந்து விடுதலை செய்யப்பட்டனர். (இ_எ)

## நேர்முகப் பரீட்சை இன்று இல்லை

25 ஆயிரம் பயிலுநர் ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் இன்று நடைபெற மாட்டா.

ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி கடந்த இரு தினங்களாக இந்த நேர்முகப் பரீட்சைகள் யாழ் மாவட்டத்தில் 29 இடங்களில் நடைபெற்று வருகின்றன.

இன்று ஒருநாள் ஓய்வின் பின் நாளை முதல் நேர்முகப் பரீட்சைகள் தொடர்ந்து நடைபெறும்

### பண்டத்தரிப்பு, சுழிபுரம்

## வட்டுக்கோட்டையிலிருந்தும் இந்தியப்படை விலகியது

வலிகாமம் மேற்கில் வட்டுக்கோட்டைத் தொகுதியைச் சேர்ந்த மூன்று முகாம்களிலிருந்து இந்தியப் படையினர் நேற்று நண்பகல் வெளியேறினர்.

பண்டத்தரிப்பு, வட்டுக்கோட்டை, சுழிபுரம் முகாம்களிலிருந்தே படையினர் நேற்று வெளியேறினர்

நேற்று நண்பகலுடன் இப் பகுதிகள் விடுதலைப் புலிகளின் முழுக்கட்டுப்பாட்டின் கீழ் வந்தன. (உ-120)

### கொழும்பு - யாழ்

## இரவு தபால் ரயில்சேவை விரைவில் ஆரம்பமாகலாம்

யாழ்ப்பாணம், பெப். 7

கொழும்பு - யாழ்ப்பாணம் இரவு தபால் ரயில் சேவை அடுத்த மாதமளவில் ஆரம்பமாகலாம் என ரயில்வே திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்சமயம் யாழ்தேவி ரயில் சேவையே நடைபெற்று வருகிறது. தபால் சேவையும் யாழ்தேவி ரயிலிலேயே தற்சமயம் நடைபெற்று வருகிறது.

இதனால் யாழ் மாவட்டத்தில் இருந்து பகல் ஒரு மணிக்கு கடைசியாக சேர்க்கப்படும் கடிதங்களே மறுநாள் காலை கொழும்புக்கு அனுப்பப்பட்டு வருகின்றன

இந்த கால தாமதங்களை அடுத்தே மெயில் ரயில் சேவையை அடுத்த மாதத்தில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## யாழ் தபால் பகுதிக்கு மேலும் நான்கு வான்கள்

யாழ்ப்பாணம் பெப் 7

யாழ் மாவட்டத்துக்கான தபால் சேவையை துரிதமாக மேற்கொள்ள புனர் வாழ்வு, புனரமைப்பு அமைச்சு நான்கு வான்களை வழங்கியுள்ளது.

இம்மாதம் முதலாம் திகதியில் இருந்து இவ்வான்கள் சேவையில் ஈடுபட்டு வருகின்றன

இதேவேளை மேலும் ஒரு வான் மிகவிரைவில் வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

புதிய வாகனங்களைப் பாவித்து யாழ் மாநகர எல்லைக்கு உட்பட்ட பகுதியில் தினசரி காலை 8 30 மணிக்கும் நண்பகல் 1 மணிக்கும் இரு தடவைகள் தபால்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. (உ-9-3)

### யாழ். நகரப்பகுதிக்கு அப்பால்

## பணக் கொடுப்பனவுகள் வங்கிகளில் இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், பெப். 7

யாழ் - நகர வங்கிகளைத் தவிர குடாநாட்டின் இதர பகுதிகளில் உள்ள ஏனைய வங்கிகளில் பணக்கொடுக்கல், வாங்கல் நிறுத்தப்பட்டுள்ளது.

பாதுகாப்பு காரணங்களுக்காக கொடுக்கல், வாங்கல் நிறுத்தப்பட்டதாக அறியவந்தது.

இதேசமயம் யாழ். பிரதம தபால் நிலையத்துக்கும் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படாததையடுத்து அங்கு கொடுப்பனவு வேலைகள் நிறுத்தப்பட்டிருப்பதாக அறியவந்தது.

கடந்த இரு தினங்களாக யாழ் பிரதம தபால் நிலையத்துக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (உ-8)

## தமிழ் தேசிய கவுன்ஸிலிலிருந்து ஈ. பி. ஆர். எல். எப். விலகியது

சென்னை, பெப் 7

தமிழ் தேசிய கவுன்ஸிலில் இருந்து வெளியேறுவதாக ஈ. பி. ஆர். எல். எப். இயக்கம் நேற்று அறிவித்தது.

இயக்கத்தின் சார்பில் அதன் பிரமுக திரு. ரஞ்சன் கர் இந்த அறிவிப்பை விடுத்ததாக இந்திய வானொலி

( 6 ஆம் பக்கம் பார்க்க )

# கிழக்கில் மோதல் நிலை இல்லை;

## புரிந்துணர்வுடன் செயற்படுவதாக யோகி தகவல்

கொழும்பு, பெப். 7

கிழக்கில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில தொடர்ந்து புரிந்துணர்வு நிலவுகிறது இரு தரப்பினருக்கும் இடையில் ஆயுதமோதல் ஏற்படக்கூடிய முறுகல் நிலை ஒன்று தோன்றியிருப்பதாக வெளியான செய்திகள் முற்றிலும் தவறானவை.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் பிரமுகரும், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகமுமான திரு. யோகரட்ணம் யோகி நேற்று இரவு உதயன் செய்தியாளரிடம் இவ்வாறு கூறினார்.

நேற்று மாலை கொழும்பில் இலங்கை அரசாங்கத் தரப்புப் பிரதிநிதிகளுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்திய அவர், நேற்றைய பேச்சுகள் முடிந்த கையோடு உதயன் செய்தியாளருடன் பேசினார்.

இலங்கை அரசாங்கத்தின் தரப்பில் உயர்கல்வி அமைச்சர் ஜனாப். ஏ. ஸி. எஸ். ஹமீத், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சேபால

( 6 ஆம் பக்கம் பார்க்க )

### யாழ். காணிப் பதிவகத்தில்

## 1988 ஏப்ரல் வரையுள்ள மூலப்பிரதிகள் பதிவாகும்

யாழ்ப்பாணம், பெப். 7

யாழ் காணிப் பதிவகத்தில் 10-10-87 தொடக்கம் 30-4-88 வரையுள்ள மூலப் பிரதிகளை பதியும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

யாழ் காணிப் பதிவகத்தில் 10-10-87 திகதி முதல் எந்த வித பதிவுகளும் மேற்கொள்ளப்படவில்லை.

தற்சமயம் முதல் படியாக 10-10-87 க்கும் 30 4 88 க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் எழுதப்பட்ட காணி உறுதிகளின் மூலப்பிரதிகளை பதிவகத்தில் பதியும்படி கோரப்பட்டுள்ளது.

யாழ் மாவட்டத்தில் உள்ள 230 நொத்தாரிசுமார்களை உடன் வந்து தம் பகுதி உறுதிகளை பதியுமாறு கோரப்பட்டுள்ளது. (இ-3)

## ஆஸ்பத்திரி கட்டட நிதி ஒதுக்கீடு இல்லை

யாழ்ப்பாணம், பெப். 7

யாழ்- போதனாவைத்திய சாலையில் இவ்வருடம் கட்டடங்கள் அமைக்க நிதிஒதுக்கீடு செய்யப்படவில்லை என்று அறிய வருகிறது.

யாழ் - போதனாவைத்திய சாலைக்கு புதிய வார்ட்டுக்கள், வைத்திய அதிகாரிகள் விடுதிகள், அமைக்க சுகாதார அமைச்சிடம் வைத்தியசாலை நிர்வாகம் கோரிக்கை விடுத்திருந்தது.

இந்தக் கோரிக்கை ஏற்கப்படாமல் மற்றைய செலவினங்களுக்கு மட்டுமே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று வைத்தியசாலை நிர்வாகி ஒருவர் தெரிவித்தார். (இ-8)

### டொலர் கடத்தல்:

## கைதான நால்வரும் என்ன ஆனார்கள்?

ரூபா 44 லட்சம் பெறுமதியான அமெரிக்க டொலர்களை எடுத்து வந்த குற்றச்சாட்டில் கைதான 4 நபர்களும் என்ன ஆனார்கள் என்பது தெரியவில்லை.

இந்த நால்வரும் மாதகல் கடலில் வைத்து இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டது தெரிந்ததே.

இது பற்றி யாழ் சுங்கத் திணைக்கள அதிகாரி ஒருவருடன் தொடர்பு கொண்டபோது, இவ்வாறு கடலில் வைத்து கைதாவோர் 24 மணி நேரத்திற்கு உள்ளாக சுங்கத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்றும் ஆனால் இதுவரை அவர்கள் ஒப்படைக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-9)

### சுபநேரம்

7-2-1990
தை-25
புதன்கிழமை
சுபநேரம்: 5-05 முதல் 6-35 வரை; ராகுகாலம் 12-35 முதல் 2-05 வரை;
பிரதோஷ விரதம்
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

## போக்குவரத்துச் சபைமீது தொழில் அமைச்சு வழக்கு

இலங்கை போக்குவரத்துச் சபைமீது தொழில் அமைச்சு வழக்குத் தொடரவிருக்கிறது.

ஊழியருக்கான 80 கோடி ரூபா பணத்தை ஊழியர் சேமலாப நிதியத்திற்கு செலுத்தத்தவறியதற்காகவே இவ்வழக்குத் தாக்கல் செய்யப்படவிருப்பதாக தொழில் அமைச்சு அதிகாரி ஒருவர் சொன்னார்.

போக்குவரத்துச் சபையில் சுமார் 53 ஆயிரம் பேர் கடமைபுரிகின்றனர். இவர்களுக்கான நிதியை ஊழியர் சேமலாப நிதியத்துக்கு இச் சபை நீண்டகாலமாகவே செலுத்தவில்லை என்று தெரியவந்துள்ளது. (உ-எ)

## அடகு நகைகள் விரைவில் மீளளிப்பு

யாழ்ப்பாணம், பெப். 7

மீளளிக்கப்படாமல் தேங்கிக்கிடக்கும் அடகு நகைகளை உரியவர்களிடம் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த நடவடிக்கைகளை வழங்கும் வேலை இன்னும் சில வாரங்களில் ஆரம்பமாகும்.

மக்கள் வங்கியின் அதிகாரி ஒருவர் இத்தகவலை உதயனுக்குத் தெரிவித்தார்.

ஏற்கனவே மீளளிக்கப்பட்டு வந்த அடகு நகைகள் கடந்த அக்டோபர் முதல் இடைநிறுத்தி வைக்கப்பட்டது.

பலாலியிலிருந்து அடகு நகைகளை எடுத்துவர இந்திய ஹெலிக்கொப்டர்கள் அதுவரை பயன்படுத்தப்பட்டு வந்தன.

ஆனால் பின்னர் இந்த வசதி கிடைக்காமல் போனதாலும் இலங்கை ஹெலிக்கொப்டர்கள் சேவையாற்ற தயங்கியதாலும் அடகு நகை மீளளிப்பு இடைநிறுத்தி வைக்கப்பட்டது.

பலாலியிலிருந்து நகைகளை நகருக்கு எடுத்து வருவது சம்பந்தமான ஒழுங்குகள்

( 6 ஆம் பக்கம் பார்க்க )

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல இன அல்சேஷன் 7 மாத ஆண், பெண் குட்டிகள் விற்பனைக்குண்டு. உடன் தொடர்பு கொள்ளவும். இ. நாபன் 17/1 கம்பர்புலவர் வீதி யாழ்ப்பாணம் (பெருமாள் கோவில் அண்மையில்) (2448)

நல்ல நிலைமையிலுள்ள B. M. C. ஒஸ்ரின் லொறி டிப்பர் விற்பனைக்குண்டு. N. V. குமார் 115, பாற்பண்ணை வீதி, திருநெல்வேலி. (2250

கண்ணாடி அலுமாரி மற்றும் சில்லறைக் கடைக்கு உரிய தளபாடம் உடன் விற்பனைக்கு உண்டு: விளம்பர இல-96 மே/பா உதயன் யாழ்ப்பாணம். (2253)

Honda Recondition C 90 Lancer 50 Chaly மோட்டார் சயிக்கிள்கள் விற்பனைக்கு உண்டு. No-390 மெயின்வீதி பஸ்ரியன் சந்தி, கண்டுக்குளி யாழ்ப்பாணம். (2249)

பழைய புத்தகங்கள் விற்கப்படும் வாங்கப்படும் Second Hand Book House' 13/6, ஸ்ரான்லி வீதி (இலங்கை வங்கி, முரசொலிக்கு முன் வைத்திலிங்கம் மரக்காலை லேன்) யாழ்ப்பாணம் (2431)

### கோழிக்குஞ்சு விநியோகம் Uplands Farm

(R. I. R) தனிச் சிவப்பு, கறுப்பு சேவல், பேடு (பிலிமத்) கறுப்புபுள்ளி சேவல் (Dekalb) பிறவுண் சேவல் பேடு (Cobb) புறொயிலர் குஞ்சுகள் எதிர்வரும் 7 2 90 புதன்கிழமை விநியோகிக்கப்படும் முன் கூட்டியே பதிவுசெய்க: இல: 9 சந்தைபா லேன், சுன்னாகம். (புகையிரத நிலையத்துக்கு அருகில்) (2433)

### கோழிக்குஞ்சு விநியோகம்

Prima Lohmann சிவப்பு, வெள்ளை பேட்டுக்குஞ்சுகள், புறொயிலர் குஞ்சுகள் Golden comet சிவப்பு பேட்டுக்குஞ்சுகள் கறுப்பு, சிவப்பு சேவற் குஞ்சுகள் ஒவ்வொரு புதன்கிழமைகளில் பெற்றுக்கொள்ளலாம்: Nallur Farm Centre C/o நல்லூர் வீடியோ சென்ரர் 19, முருகேசர் ஒழுங்கை முத்திரைச் சந்தையடி, நல்லூர். (2428)

### விற்பனையாளர் தேவை

யாழ் நகரில் அமைந்துள்ள மின்பொருள் விற்பனை ஸ்தாபனத்திற்கு ஆற்றல் மிக்க விற்பனையாளர்கள் தேவை. முன் அனுபவமும் ஆங்கில அறிவும் உயர்தர கணிதமும் தேவை. வயதெல்லை 20-35 இடைப்பட்டவர்கள் சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பிக்கவும். விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி, நியூரோன் எலக்ரிக்கல்ஸ், 141, 143, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி/3779)

### புகைப்படப்பிடிப்பாளர் தேவை

எமது ஸ்தாபனத்தில் கடமையாற்றுவதற்கு வேலை தெரிந்த புகைப்படப் பிடிப்பாளர் தேவை. வேலை பழக விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம். National Apprentice Board பயிற்சித் திட்டத்திற்கமைய பயிற்சி அளிக்கப்படும். எஸ். கே. எஸ் போட்டோஸ் காரைநகர் (2440)

### தேவை

உருக்கு அலுமாரி வேலை செய்வதில் திறமையும் அனுபவமும் கொண்ட வேலை ஆட்கள் தேவை: நேரில் வரவும். பரஸ்ரோ என்ஜினியரிங் வேக்ஸ், பருத்தித்துறை வீதி, நல்லூர் (2232)

### வகுப்புகள்

ஆரம்ப பிரெஞ்சு மொழி வகுப்பும், பரதம், பாட்டு, மிருதங்கம், ஓவிய வகுப்புகளும் தைப்பூசநாள் 8-02-90 வியாழக்கிழமை மாலை 3 00 மணிக்கு ஆரம்பமாகின்றன. தொடர்பு: யாழ் பிரெஞ்சிய நட்புறவுச் சங்கம் Alliance Francaise de Jaffna 130, 1ஆம் குறுக்கு வீதி யாழ்ப்பாணம். (C/3718)

### TYPEWRITERS

Typewriters - Standard, Portable தட்டச்சு இயந்திரங்கள் விற்பனைக்குண்டு. சிறந்த முறையில் திருத்தியும் கொடுக்கப்படும் Fudo 39/17 மின்சார நிலைய வீதி, 3ம் ஒழுங்கை (Samy & Co அருகாமையில்) யாழ்ப்பாணம். [சி-3775]

### கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் ஆங்கிலம் சிறுவர்களிலிருந்து அரசாங்க உத்தியோகத்தர் வரை (நாளாந்த வாழ்க்கையில் ஏற்படும் நிகழ்ச்சிகளை மையமாக வைத்து) ஆங்கிலம் கற்பிக்கப்படுகிறது. விபரங்கள் நேரில் எஸ். ஜெயராஜா கல்யாணி ஆங்கில கல்வி நிலையம், 204, மானிப்பாய் ரோட், ஓட்டுமடம், யாழ்ப்பாணம். (2437)

### தவறிவிட்டது

மூக்குக் கண்ணாடி சனிக்கிழமை 3-2-90 யாழ்ப்பாணத்திற்கும் மானிப்பாய்க்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பஸ்நிலைய முன்பகுதியுள்ள யாழ். விற்பனை திணைக்களத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். [2445]

சேனாதிராசா சண்முகதாஸ் ஆகிய எனது அடையாள அட்டை (700922910l) 3-2-90 அன்று நல்லூரில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். [2243]

### போட்டோஸ்ரற்

யாழ் பஸ்நிலையத்தில் தங்களின் சகல ஆவணங்களையும் மிகவும் தெளிவாக போட்டோஸ்ரற் செய்து கொள்ள ஸ்ரீ காந்தி புத்தகசாலை, 165, மின்சாரநிலைய வீதி, பஸ்நிலைய முன்புறம் யாழ்ப்பாணம். C/3717)

### ஆங்கில கைநூல்

Practice Makes Perfect Series 1-7 ஆங்கிலத்தில் பேசவும் எழுதும் திறமைபெற உதவும் கைநூல்கள்; தயாரிப்பு S. B. Iyar இடைக்குமிடம் 12 (36) வைமன் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம். (2233)

### Toefl வகுப்புகள்

சனி ஞாயிறு நாட்களில் காலை 8 30 10 மணி S. B. Iyar 12, வைமன் வீதி, நல்லூர். (2235)

### புத்தகங்கள்

செங்கை ஆழியானின் பிரளயம் 50/- கிடுகுவேலி 30/- மீரா வெளியீடுகளாக 1988, 1989 வெளிவந்த பத்து ஈழத்து நாவல்கள் 225/- ராஜா புத்தகசாலை பஸ்நிலையம், யாழ்ப்பாணம் All Ceylon Distributors. Jaffna Colombo (2241)

## கிரிக்கெட் போட்டிகள்

யாழ்ப்பாணம், பெப் 7 யாழ் பாடசாலை கிரிக்கெட் குழுக்கள் போட்டிகளில் ஈடுபட உற்சாகமாக தம்மை தயார் செய்து கொண்டிருக்கின்றன. பல அணிகள் பயிற்சி ஆட்டங்களில் இறங்கியும் விட்டன.

எதிர்வரும் 9 ஆம் திகதி யாழ்ப்பாணக் கல்லூரி அணி ஷப்ரு அணிக்கு எதிராகவும், பரியோவான் கல்லூரி அணி ஜொனிலன்ஸ் அணிக்கு எதிராகவும் தமது கல்லூரி மைதானங்களில் பயிற்சி ஆட்டங்களில் ஈடுபடும். (ஈ)

## இன்று

காரைநகர் வியாவில் ஐயனார் ஆலய புனராவர்த்தன பிரதிஷ்டா கும்பாபிஷேகம் இன்று மாலை நடைபெறுகிறது.

தருமை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளின் இயல்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோரின் ஆசியுரையும், பட்டிமன்றமும் இடம் பெறும். (-3)

## இடமாற்றம்

ரயில்வே திணைக்கள பருத்தித்துறை ரயில் பாதைகள் முகாமையாக கடமையாற்றிய எஸ். அம்பிரட் இம்மாதம் முதலாம் திகதிமுதல் மாங்குளம்பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டார்.

இவரின் இடத்துக்கு மாங்குளம் பகுதியில் முகாமையாக கடமையாற்றிய மகாதேவா இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (க 117)

எமது நேற்றைய புதிய வெளியீடுகள்

(1) ராமராஜன் - சீதா - கவுண்டமணி
"மனசுக்கேத்த மகராசா"

(2) யோகராஜ் - ரஞ்சனி - செந்தில்
"சம்சாரமே சரணம்"

குணம் வீடியோ சென்ரர், 42, மணிக்கூட்டு வீதி யாழ்ப்பாணம்: (C/3792)

## பதவி வெற்றிடம் நிரப்பல்

தென்மராட்சி பேற்கு ப. நோ. கூ. சங்கம், கைதடி.

பதவிகள்.

1. தட்டெழுத்தாளர்
2. காவலாளி

விண்ணப்ப முடிவு திகதி 13 02. 1990 முற்பகல் 12.00 மணி வரை

3. விண்ணப்பதாரிகள் சங்க எல்லைப் பரப்புக்குள் நிரந்தர குடியிருப்பாளர்களாக இருக்கவேண்டும்
4. கல்வித் தகைமைகள் சம்பந்தமான விபரங்களுக்கு சங்க எல்லைக்குட்பட்ட கிளை ஸ்தாபனங்களிலும், தலைமைக் காரியாலயத்திலும், சன சமூக நிலையங்களிலும் பார்வையிடலாம்:
5. மேலும் விபரங்களுக்கும், விண்ணப்பப் படிவத்திற்கும் சங்க வேலை நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

பொது முகாமையாளர்

தென்மராட்சி மேற்கு
ப. நோ. கூ. சங்கம்,
தலைமைச் செயலகம்.
மானிப்பாய் வீதி, கைதடி:

(C/3789)

## விக்ஞ டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்.

90 கலை, வர்த்தக மீட்டல் வகுப்புக்கள்

DAY CLASSES [7 15]

ஆரம்பம்: 19 - 02 - 1990

Sat & Sun Classes [8.00 — 12.00]

ஆரம்பம்: 18 - 02 - 1990

[சி-3738]

பச்சிலைப்பள்ளி தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனைக் கூட்டுறவுச் சங்கம் - பளை (மட்டுப்படுத்தப்பட்டது)

## பதவி வெற்றிடம்

### பொதுமுகாமையாளர் தரம் 101-09

சம்பளத்திட்ட நிரல் ரூபா 905/- — 1605/- / 40 × 5 — 50 × 10

தகைமைகள்:

(அ) கூட்டுறவுப் பணியாளர் 10 ஆவது சம்பளத் திட்டத்தில் முகாமையாளர் / மேற்பார்வை பட்டத்திலான 3 வருடங்கள் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 11 ஆவது சம்பளத் திட்டத்திலான பதவியில் 6 வருடங்கள் குறையாத அனுபவம்;

அல்லது

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டம் அல்லது அதற்கிணையான தகைமை

அல்லது

(இ) கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திரம் (உயர்தரம்) க. பொ. த (உயர்தரம்) இல் 3 பாடங்கள் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / தொழில் நுட்ப ஸ்தாபனமொன்றில் முகாமை / மேற்பார்வை மட்டத்திலான பதவியில் ஒரு வருடத்திற்கு குறையாத அனுபவம்.

வயது 23 வருடங்களுக்கும் 50 வருடங்களுக்கும் உட்பட்டிருத்தல் வேண்டும்.

மேற்படி தகைமை உள்ளவர்கள் தமது விண்ணப்பத்தை சொந்தக் கையெழுத்தில் பூர்த்தி செய்து 25 02 90 ஆம் திகதிக்கு முன் தலைவர் தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனைக் கூட்டுறவுச் சங்கம், பளை என்ற முகவரிக்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்

குறிப்பு: சங்க எல்லைப் பரப்பிற்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தலைவர்,
பச்சிலைப்பள்ளி தெ. ப. பொ. உ. வி.
கூட்டுறவுச் சங்கம்,
பளை.

திகதி: 05. 02. 1990 (2446)

### கைதடியில் குருபூசை

அருள்மிகு சுவாமி சச்சிதானந்த சுவாமிகளின் குருபூசை கைதடி ஸ்ரீ சச்சிதானந்த ஆச்சிரமத்தில் இன்று 7 ஆம் திகதி (புதன்) நடைபெறும். பகல் மகேசுர பூசையுடன் விசேட பூசைகளும், அபிஷேகங்களும் இடம்பெறும்.

அடியார்கள் (2452)

## கலை வர்த்தகக் கல்லூரி C. C. A

மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம் (வெலிங்டன் சந்தி அருகே)

## A L 90

சனி. ஞாயிறு வகுப்புகள்

பொருளியல் - வரதராஜன்

Sat, Sun 9 - 10

ECON PAPER I பணமும் வங்கியும்

ECON PAPER II வரவு செலவுத் திட்டம்

Sat, Sun 1 - 2

மீட்டல் வினா - விடை வகுப்பு விலைக்கோட்பாடு

கணக்கியல் ஸ்ரீ

| | | |
|---|---|---|
| Sat, Sun | 7 - 8 | கம்பனிக் கணக்குகள் |
| | 8 - 9 | ஒப்பனைக் கணக்குகள் |
| | 10 - 11 | உற்பத்திக் கணக்குகள் |

வர்த்தகம் - ரட்ணம்

Sat, Sun 8 - 9 COM PAPER II

Sat, Sun 12 - 1 மீட்டல் வினா-விடை வகுப்பு

ஆரம்பம்: 10- 02- 1990

சனி 7. 00 a m (சி/3786)

## G. A. Q, B. A

## வெளிவாரிப் பரீட்சைகள்

1988 DEC இல் நடைபெறவேண்டிய B A பரீட்சையும் 1989 APRIL ல் நடைபெறவேண்டிய G A Q பரீட்சையும் 1990 APRIL முதல் கிழமையில் நடைபெறவுள்ளது; இப்பரீட்சைகளுக்கான

மீட்டல் வினா - விடை வகுப்பு

ஆரம்பமாகின்றது.

பொருளியல் - வரதராஜன்

சனி 2 00 p. m

(வினா- விடைக் குறிப்புகள் வழங்கப்படும்)

தமிழ் - குழந்தை

சனி 3. 00 p m

ஆரம்பம் 10. 02. 1990

கலை வர்த்தகக் கல்லூரி C.C.A

பணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (வெலிங்டன் சந்தி அருகே) (C/3783)

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திரு: சின்னத்துரை அமிர்தலிங்கம்
(முன்னாள் சட்டத்தரணியும் பதில் நீதவானும் மரண விசாரணை அதிகாரியும்)

மண்ணில்: 08 - 10 - 1928
விண்ணில்: 07 - 02 - 1985

"எரியால் சுடப்படினும் உய்வுண்டாம் உய்யார்,
பெரியார்ப் பிழைத்தொழுகுவார்"

தீயால் சுடப்பட்டாலும் ஒருகால் உயிர்பிழைத்து வாழ முடியும் ஆற்றல் மிகுந்த பெரியாரிடத்தில் தவறு செய்து நடப்பவர் தப்பிப்பிழைக்க முடியாது.

-திருக்குறள்

என்றும் மாறாத அன்புடன் நினைவு கூரும்
மனைவி, பிள்ளைகள், மருமகன்.

"லிங்கஸ்தான்"
கோப்பாய் தெற்கு,
கோப்பாய். (2247)

உ

## ★ திருமண அழைப்பிதழ் ★

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சுக்கில வருடம் தைத்திங்கள் 28 ஆம் நாள் ((10 - 02 - 1990) சனிக்கிழமை காலை 7. 00 மணி முதல் 8 30 மணி வரை வரும் கும்பலக்கின சுபவேளையில்

| | |
|---|---|
| எமது புத்திரன் திருநிறை செல்வன் | எமது புத்திரி திருநிறை செல்வி |
| ஜெயக்குமார் | தவமலர் |
| (வீதி அபிவிருத்தி அதிகார சபை மன்னார்) | (ஆசிரியை, கப்புது ஏராம்பர வித்தியாலயம்) |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

மணமகளில்லத்தில் திருமணம் செய்து வைக்கப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசிர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்
(அன்று பிற்பகல் 3 00 மணிக்கு மணமகன் இல்லத்தில் வரவேற்புபசாரம் நடைபெறும்)

தங்கள் நல்வரவை நாடும்

திரு. அ. ஆறுமுகம்
(இளைப்பாறிய ஆசிரியர் சமாதான நீதவான்)
திருமதி. க. ஆறுமுகம்
(ஆசிரியை)
(தாமோதரம் வீதி, சாவகச்சேரி.

திரு க. கந்தவனம்
(இளைப்பாறிய அதிபர்)
திருமதி: த. கந்தவனம்
(அதிபர் கப்புது ஏராம்பர வித்தியாலயம்)
கப்புது கரவெட்டி

(2441)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

இன்றும் வருவது கொல்லோ நெருநலுங்
கொன்றது போலும் நிரப்பு.

**பொருள்:**

நேற்றும் கொலை செய்ததுபோல் துன்புறுத்திய வறுமை இன்றும் என்னிடம் வருமோ! (என்று வறியவன் நாள்தோறும் கலங்கி வருந்துவான்.)


# உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 2288

07 - 02 - 1990 த. பெ. இலக்கம் 23


## புரிந்துணர்வு வளரட்டும்

மொழி, இனம், குலம், கோத்திரம் ஆகிய வித்தியாசங்களின் பேரில் மக்களுக்கு அநீதி இழைக்கப்பட மாட்டாது. அநீதி இருந்தால் சுதந்திரம் இருக்காது. அங்கு அடிமைத் தனமே இருக்கும்.

அறிவுரை கோருதல், சமரச இணக்கம், கருத்தொருமைப்பாடு ஆகியவற்றின் உதவியால் நாம் எமது நாட்டை மீண்டும் கட்டி எழுப்பி வருகிறோம். இது இலேசான காரியம் அல்ல: ஆனால் அது உற்சாகம் ஊட்டும் காரியமாகும் அதற்குக் கட்டுப்பாடும் ஒழுங்கும் அவசியம். அதற்குப் புரிந்துணர்வு மிக அவசியமாகும். அந்தப் புரிந்துணர்வை ஏற்படுத்தப் புதிய உளப்பாங்குகளும், அணுகு முறைகளும் தேவை.

நாம் நல்லுறவை நோக்கிச் செல்ல வேண்டியவர்களாக இருக்கிறோம். இது தனி மனிதன் ஒருவனால் சாத்தியப்படக் கூடியதல்ல. எல்லா இன மக்களும் ஒன்று சேர்ந்து முன்னேற்றத்தை நோக்கிச் செல்வது அவசியமாகும்; ஒற்றுமையில் தான் எமது வெற்றி தங்கி உள்ளது.

ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாச தமது சுதந்திர தின உரையில் தெரிவித்த மூன்று முக்கிய அம்சங்கள் இவை: கருத்து ரீதியாக அர்த்தம் நிறைந்தவை. நடைமுறையில் வந்தால் இந்த நாட்டில் அரசியல் பிரச்சினைகளும், குழப்பங்களும் ஏற்பட இடமிருக்காது.

மொழி, இனம், மதம், கோத்திரம் என்ற பெயரில் மக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டால் நாட்டில் சுதந்திரம் நிலவ முடியாது. உண்மையான, உரிமைகளுடன் கூடிய சுதந்திரத்தை எல்லா இன மக்களும் அனுபவிக்க முடியாது:

அதன் விளைவாக நாட்டில் குழப்பங்களும், பிரச்சினைகளும் உருவாகி நாட்டை உருக்குலைக்கும் என்பதைக் கண்டு வருகிறோம். ஆகவே எல்லோருடைய உரிமைகளும் சமமாக வழங்கப்பட வேண்டும் என்பதை எல்லோரும் உணருதல் முதற் தேவை. ஒரு சாராரின் பிரச்சினைகளை மறுசாரார் புரிந்துகொள்ள வேண்டும். மக்கள் ஒவ்வொருவரும் அடுத்தவர்களைப் புரிந்துணர வேண்டும். புரிந்துணர்வு இருந்தால் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது சுலபம்.

மக்களிடையே புரிந்துணர்வு ஏற்படுவதற்கு, அதற்குரிய மனப்பாங்கு அவர்களிடம் உருவாக வேண்டும். காலத்துக்கு ஏற்ற அணுகு முறைகளைக் கடைப்பிடிக்கவும், அவற்றைச் சீரணிக்கவும் மன ஒப்புதல் உண்டாக வேண்டும்.

புரிந்துணர்வும், மன ஒப்புதலும் மக்களிடையே மலர்ந்தால் தான், நாட்டில் சமூக, இன, தேசிய ஒற்றுமையைத் தோற்றுவிக்க முடியும். அப்போது தான் நாட்டில் அமைதியையும், சமாதானத்தையும், நீதியையும் நிலை நாட்ட முடியும்.

இவற்றை எல்லாம் சொல்வதும், எழுதுவதும், போதிப்பதும் இலகுவானது. மக்களின் வாழ்க்கையில், நடைமுறையில் அமுல் செய்வதில் தான் இந்தக் கருத்துக்கள், தத்துவங்களின் வெற்றி தங்கி உள்ளது.

இலங்கையின் பிரதான விவகாரமான இனப் பிரச்சினையின் தீர்வுக்கு தமிழ் - சிங்கள மக்களிடையே உண்மையான, உளப் பூர்வமான புரிந்துணர்வும், புதிய அணுகு முறைகளும் இன்றியமையாதவை. இதில் இரு சாராருக்கும் பங்கு உண்டு என்றாலும், பெரும் பங்கு சிங்கள மக்களிடமே உள்ளது. இதுவரை விட்ட தவறுகளை நிவிர்த்தியாக்க அவர்கள் பெரும் பங்காற்றி ஈடு செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

தமிழர்களுக்கு இழைத்த அநீதிகளைக் களைந்து, அவர்களுக்கு நீதி வழங்கும் மனப்பக்குவம் உண்மையாகவே சிங்கள மக்களிடம் உதிக்கவேண்டும். அதற்கான வழியை அவர்களின் தலைவர்கள் காட்ட வேண்டும். செயல் வடிவில் முன்னெடுத்துச் செல்ல வேண்டும். அரசாங்கத்தலைவர் கூறுவதால் மட்டும் அதனை இலகுவில் ஈட்டிவிட முடியாது. சகல அரசியல் தலைவர்களிடத்தும் கருத்து ஒருமை, செயல் ஒற்றுமை பரிணமிக்க வேண்டும். அதுவே பிரச்சினைக்குத் தீர்வு தரும். நாட்டின் சுபீட்சத்துக்கு வழிவகுக்கும்.

# அனுதைகளாக்கப்பட்ட பெண்களுக்கு பல்வேறு தொழில் நிலையங்கள்

## யாழ். செஞ்சிலுவைச் சங்கம் திட்டம்

யாழ்ப்பாணம், பெப்: 7

கடந்த காலச் சம்பவங்களின்போது அனுதைகளாக்கப்பட்டுள்ள பெண்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் 24 இலட்சம் ரூபா செலவில் பல்வேறு தொழில் நிலையங்களை அமைக்க யாழ். செஞ்சிலுவைச் சங்கம் திட்டம் தீட்டியுள்ளது.

இவ்வருடத்தில் நடைமுறைப்படுத்தவுள்ள பல்வேறு திட்டங்கள் குறித்து இச்சங்கம் விவரங்களை கொழும்பு தாய்ச் சங்கத்துக்கு சமர்ப்பித்தது.

தாய்ச்சங்கம் அனுமதி வழங்கி இவற்றை ஜெனிவா தலைமையகத்துக்கு அனுப்பி உள்ளது:

நடைமுறைப்படுத்தப்பட விருக்கும் திட்டங்கள் வருமாறு.

★ மன்னாரில் கோழித்தீன் தொழிற்சாலை;

★ வவுனியாவில் சோப் தொழிற்சாலை;

★ கிளிநொச்சியில் தென்னந் தும்புத் தொழிற்சாலை.

★ முல்லைத்தீவில் தேங்காய் எண்ணெய் தொழிற்சாலை;

★ பனம்பொருள் உற்பத்திப் பொருள்களைத் தயாரிப்பது சம்பந்தமான பயிற்சி அளிக்க 10 நிலையங்கள் அமைக்கப்படும்; அதில் பயிற்சி பெற்றவர்களுக்கு கூட்டுறவு அடிப்படையில் வேலை வாய்ப்பு அளிக்கப்படும்:

★ வாழை நாரில் இருந்து கைப்பணிப்பொருள்கள் தயாரிக்கும் பயிற்சி நிலையங்கள் அமைக்கப்படும் அவற்றில் பயிற்சி பெறுபவர்களுக்கு கூட்டுறவு அடிப்படையில் வேலை வாய்ப்பு அளிக்கப்படும்:

கணவனை இழந்து விதவைகளான பெண்களுக்கும், பெற்றோரை இழந்த பெண்களுக்கும வேலைவாய்ப்பில் முதலிடம் அளிக்கப்பட இருக்கிறது: (இ-3)

## நமசிவாய வித்தியாலய கட்டட வேலை பூர்த்தி நிலையில்

கொக்குவில் பெப். 7

கடந்த கால வன்செயல்களின் போது நிர்மூலமாக்கப்பட்ட கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தில் பல கட்டடங்கள் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளன

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் 100 அடி நீள 20 அடி அகல கட்டடமொன்றும், றெட்பானாவின் உதவியுடன் 100 அடி நீள 25 அடி அகல ஒரு மாடிக்கட்டமொன்றும் பூர்த்தியாகியுள்ளன:

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் நிர்மாணிக்கப்பட்டுவரும் இரண்டு மாடிக் கட்டடத்தில் தரை மண்டபமும், முதலாம் மாடி வேலையும் பூர்த்தி செய்யப்பட்டு இரண்டாம் மாடி வேலைகள் நடைபெற்று வருகின்றன:

பாடசாலை அதிபர், அபிவிருத்திச்சபை, மற்றும் கல்வித் திணைக்கள கட்டடப் பொறுப்பு அதிகாரிகள் ஆகியோரின் இடைவிடா முயற்சியினால் குறுகிய காலத்தில் இக்கட்டடங்கள் பூர்த்தியாகியுள்ளன. (இ-க)

## செஞ்சிலுவைச்சங்கம் மேலும் 309 வீடுகளை அமைக்கும்

யாழ்ப்பாணம், பெப் 7

யாழ் மாவட்டத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு மேலும் 309 வீடுகளை அமைத்துக் கொடுப்பது சம்பந்தமாக நோர்வே செஞ்சிலுவைச் சங்கம் பேச்சு நடத்தியது

வீமன்காமம் கிராமத்தில் ஏற்கனவே 82 வீடுகளைப் பாதிக்கப்பட்டவர்களுக்கு மேற்படி சங்கம் அமைத்துக் கொடுத்திருந்தது'

மேலும் 309 வீடுகளை யாழ் மாவட்டத்தில் அமைத்துக் கொடுப்பது சம்பந்தமாக கடந்தவாரம் இங்கு வந்த நோர்வே செஞ்சிலுவைச் சங்கச் செயலாளர் நாயகம் ஒன்கிருன் யாழ் சங்க அதிகாரிகளுடன் பேச்சு நடத்தினர்

170 இலட்சம் ரூபா செலவில் பொலிகண்டியில் 200 வீடுகளும், ராசலிங்கம் வீதியில 61 வீடுகளும், தம்பாலையில் 48 வீடுகளும் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது, (இ-3)

## முறைசாராக் கல்வி மாணவருக்கு உபகரணம்

யாழ்ப்பாணம், பெப். 7

முறைசாராக் கல்வி மாணவர்களுக்கு உதவும் வகையில் ஐந்தரை இலட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஐ. நா. அகதிகள் புனர்ஸ்தானிகராலயமும், கல்வி அமைச்சும் இணைந்து இந்த உபகரணங்களை வழங்கியுள்ளன;

முறைசாராக் கல்வி போதிக்கப்படும் பாடசாலைகளுக்கு இந்த உபகரணங்கள் எதிர்வரும் 12ஆம் திகதி வழங்கப்படவிருக்கின்றன;

மின் இணைப்பு, ஹோட்டல் துறை, இலத்திரனியல், தட்டச்சு ஆகிய பயிற்சிகளை அளிக்க தேவையான உபகரணங்களே வழங்கப்படுகின்றன. (இ-3)

## முல்லைத்தீவு வங்கி

முல்லைத்தீவு, பெப் 7

முல்லைத்தீவு இலங்கை வங்கிக்கிளை 1989 ஆம் ஆண்டு பெருமதிலாபத்தை ஈட்டியுள்ள தாக முகாமையாளர் திரு. எஸ். விக்னராசா தெரிவித்தார்;

1978 ஆம் ஆண்டு திறக்கப்பட்ட இந்த வங்கிக்கிளை 1989 ஆம் ஆண்டில் தான் முதல் முதலாக பெரும் லாபமீட்டியுள்ளது:

இதற்கு வங்கி உத்தியோகஸ்தர்கள் சக ஊழியர்கள் வாடிக்கையாளர் ஆகியோரின் ஒத்துழைப்பே காரணம் என முகாமையாளர் தெரிவித்தார்: (இ-92)

## மாங்குளத்தில் இலங்கை வங்கி

மாங்குளம், பெப் 7

மாங்குளத்தில் மீண்டும் இம்மாதம் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இலங்கை வங்கிக்கிளை திறக்கப்படவுள்ளது;

இதற்கான சகல ஒழுங்கு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வங்கியின் முகாமையாளராக திரு. க. தவயோகம் நியமிக்கப்பட்டுள்ளார்; (இ-94)

## குறிகாட்டுவான் - நெடுந்தீவு படகுச்சேவை ஆரம்பம்

யாழ்ப்பாணம், பெப் 7

குறிகாட்டுவான்-நெடுந்தீவு படகுச்சேவைமீண்டும் ஆரம்பமாகியுள்ளது:

மேற்படி சேவை நீண்டகாலமாக இடைநிறுத்தப்பட்டிருந்தது இப்பகுதி மக்கள் மிகுந்த கிரமங்களை அனுபவித்துவந்தனர்.

இந்நிலையில், நெடுந்தீவு பிரதேசசபை விசேஷ ஆணையாளரினால் எடுக்கப்பட்ட முயற்சியின் காரணமாக படகுச்சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது

இச்சேவை தினமும் காலை 7.00 மணிக்கு நெடுந்தீவில் இருந்து குறிகாட்டுவானுக்கும், காலை 9.30 மணிக்கு குறிகாட்டுவானிலிருந்து நெடுந்தீவுக்கும், பின்னர் மாலை 2,00க்கு நெடுந்தீவில் இருந்து குறிகாட்டுவானுக்கும், மாலை 3.30க்கு குறிகாட்டுவானில் இருந்து நெடுந்தீவுக்கும் நடத்தப்பட்டு வருகின்றது:

கடந்த 5 ஆம் திகதி காலை 9 30 மணிக்கு இச்சேவை ஆரம்பித்துவைக்கப்பட்டது:

இச்சேவையை குறிகாட்டுவானில் இருந்து - நெடுந்தீவுக்கு விசேஷ ஆணையாளர், திரு. ஏ. சி. இராசதுரை ஆரம்பித்துவைத்தார். (இ-111)

## பயிலுநர் ஆசிரியர் நேர்முகப்பரீட்சை ஆரம்பம்

யாழ்ப்பாணம், பெப். 7

யாழ் மாவட்டத்தில் பயிலுநர் ஆசிரியர் தெரிவுக்கான நேர்முகப்பரீட்சைகள் திங்கட்கிழமை ஆரம்பமாகின.

குடாநாட்டில் 30 நிலையங்களில் இந்நேர்முகப்பரீட்சைகள் நடைபெற்று வருகின்றன.

யாழ் பிரதிக் கல்விப்பணிப்பாளர் செல்வி பெரியதம்பி வடமராட்சிப் பகுதியில் இடம்பெற்ற நேர்முகப்பரீட்சைகளை பார்வையிட்டார்.

ஜனவரி 25, 26, 27, 28, 29, 30, 31, பெப்ரவரி 1 ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த நேர்முகப்பரீட்சைகள் முறையே பெப்ரவரி 8, 9, 10, 11, 12, 13, 14, 15 ஆம் திகதிகளில் நடைபெறும் என்று கல்வித்திணைக்கள அதிகாரி தெரிவித்தார். (-3)

## நல்லூர் உ. அ. அ.கட்டடம் வேலை பூர்த்தியாகும் நிலை

யாழ்ப்பாணம், பெப்; 7

நல்லூரில் அமைக்கப்பட்டு வரும் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் கட்டடவேலைகள் இம்மாத இறுதிக்குள் பூர்த்தி ஆகும் என்று கட்டடத்திணைக்கள உயர் அதிகாரி தெரிவித்தார்.

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் கட்டட வேலைகள் கடந்த பலவருடங்களாக நடைபெற்றுவந்தது;

பல்வேறு சூழ்நிலைகள் காரணமாக தடைப்பட்டிருந்த வேலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு மிக விரைவாக நடைபெறுவதாகவும், இம்மாத இறுதிக்குள் பூர்த்தி ஆகும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அதே நேரம் சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் கட்டட வேலைகளும் இம்மாத இறுதியில் பூர்த்தி ஆகும் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## பிடுங்கப்பட்ட வேலிகளை மக்கள் அடைக்கின்றனர்

கொடிகாமம், பெப்: 7

தென்மராட்சி கிழக்குப் பகுதியில் இந்திய அமைதிப் படையினரின் வெளியேற்றத்தை அடுத்து வேலி அடைக்கும் வேலையில் பலரும் ஈடுபட்டுவருகின்றனர்.

பாதுகாப்புக் காரணங்களுக்காக பெரும்பாலான வேலிகள் அமைதிப்படையினரால் பிடுங்கப்பட்டன அல்லது பிடுங்குவிக்கப்பட்டன.

கொடிகாமம், மீசாலை, கச்சாய், வரணி, மிருசுவில், உசன், எழுதுமட்டுவான் முதலான தென்மராட்சி கிழக்குப் பகுதிகளில் இந்திய அமைதிப்படை வெளியேறிய பின் சகஜ நிலை உருவாகியுள்ளது.

படையினர் வெளியேற்றத்தை அடுத்து கடைகள் திறக்கப்பட்டு இரவு வரை வர்த்தகம் நடைபெற்று வருகின்றது: (இ-75)




## நயினையில் தைப்பூசம்

யாழ்ப்பாணம், பெப் 7

நாளை வியாழன்று நயினை தீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாளுக்கு சங்காபிஷேகம் நடைபெற்று அழகிய கைலாச வாகனத்தில் அம்பாள் திரு வீதி உலாவும் இடம் பெறும்:

அடியார்களின் வருகையை முன்னிட்டு இலங்கை போக்குவரத்து பஸ் சேவை விஷேடமாக காலை 8 மணி முதல் மாலை 4 மணிவரை மோட்டார் வள்ளச்சேவையை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

வழமை போல் அமுதசுரபி அன்னதான சபையினர் உணவு வழங்குவோர்கள் என ஆலய அறங்காவல்சபைத் தலைவர் திரு: சி. நாகலிங்க யாரணம் அறிவித்துள்ளார்: (இ)

## அங்குரார்ப்பண வைபவம்

யாழ்ப்பாணம், பெப் 7

நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் தேவஸ்தான புதிய துர்க்கை அம்பாள் தாம்புர விக்கிரக உருவ அங்குரார்ப்பண வைபவம் வருகிற வெள்ளிக்கிழமை (9-02-1990) பிற்பகல் நடைபெற உள்ளது.

இது தொடர்பாக சிறப்பு நிகழ்ச்சி ஒன்று ஆலய முன்றலில் நடைபெறும்.

பரிபாலன சபைத் தலைவர் திரு. கு. இட்டர் இதற்குத் தலைமை வகிப்பார். (க-எ)

## ரூ. 900 கோடி பெறுமதியான சொத்து அழிப்பு

கடந்த ஆண்டு ஜனவரி முதல் செம்டம்பா வரை தென்பகுதியில் இடம்பெற்ற வன்செயல்களில் தொளாயிரம் கோடி ரூபா பெறுமதியான அரச மற்றும் தனியார் சொத்துக்கள் தீவிரவாதிகளால் அழிக்கப்பட்டன.

திட்டமிடல் மற்றும் அமுலாக்கல் அமைச்சின் அறிக்கை ஒன்றில் இத்தகவல் வெளியிடப்பட்டது:

குறிப்பிட்ட இக்காலத்தில் அரசு தனது வருமானத்தில் 500 கோடி ரூபாவை இழந்தது என்றும் அறிக்கை கூறுகிறது. (-எ)

## சாரணர்சங்க ஆணையாளர் காலமானார்

இலங்கை சாரணர் சங்கத்தின் பிரதம ஆணையாளர் திரு றெக்ஸ்ஜெயசிங்கா கடந்த 3 ஆம் திகதி மாரடைப்பினால் காலமானார்:

எதிர்வரும் 14 ம் திகதி முதல் கொழும்பில் சாரணர்களின் முதலாவது சார்க் நாடுகளின் ஜம்போரியை நடத்த ஏற்பாடுகள் மேற்கொண்டிருந்த தருணத்தில் அவர் மறைவு ஏற்பட்டது.

இவரது மறைவு குறித்து காங்கேசன்துறை மாவட்டச் சாரணர் கிளைச் சங்கத்தினர் கண்ணீர் அஞ்சலித் துண்டுப் பிரசுரம் ஒன்றை வெளியிட்டுள்ளனர். (க-9)

## வாழைநாரிலிருந்து கைப்பணிப் பொருள்கள்

யாழ்ப்பாணம், பெப்: 7

வாழைநாரில் இருந்து கைப்பணிப்பொருள்களை தயாரிக்கும் பயிற்சிநிலையங்கள் யாழ் மாவட்டத்தில் முதல்தடவையாக புன்னாலைக்கட்டுவன் மயிலணி ஆகிய இடங்களில் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தின் ஆதரவில் நடத்தப்படும் இப்பயிற்சி வகுப்பில் முதலில் 20 பெண்கள் பயிற்சி பெறுவார்கள்; பயிற்சி முடிவடைந்ததும் கூட்டுறவு அடிப்படையில் தொழில் ஆரம்பிக்க இச்சங்கம் உதவிகளை வழங்கும்.

இத்திட்டத்தின் மூலம் பெண்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைப்பதுடன் வீணாகப் போகும் வாழைநாரைப் பயன்படுத்தி பொருளாதாரத்தை வளர்க்கலாம் என்று சங்கப் பிரதிநிதி தெரிவித்தார். (இ- 3)

## மானிப்பாய் லயன்ஸ் உதவி

மானிப்பாய், பெப்: 7

விளையாட்டு மைதான புள்ளிப் பலகை ஒன்றை மானிப்பாய் லயன்ஸ் கழகம் மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

மானிப்பாய் லயன்ஸ் கழக பிராந்திய தலைவர் லயன்: எஸ். பத்மநாதனின் முயற்சியால் இப்பலகை கிடைத்துள்ளதாக அதிபர் திரு. சி. சேசவராஜன் தெரிவித்தார். (இ-90)

# ரூபா. 25 லட்சம் செலவில் குளிரூட்டிக் கொள்கலன்

## மாங்குளம் பால் கொள்வனவு நிலையத்துக்கு மில்கோ வழங்கியது

மாங்குளம், பெப். 7

மாங்குளம் பால் கொள்வனவு நிலையத்துக்கு 25 இலட்சம் ரூபா பெறுமதியான 2500 லீற்றர் கொள்ளக்கூடிய புதிய குளிரூட்டி கொள்கலனை மில்கோ நிறுவனம் வழங்கியுள்ளது;

இப்பகுதிகளில் கடந்த கால அசம்பாவிதங்களாலும் சீரற்ற மின்சாரத்தாலும் பால்கொள்வனவு செய்ய முடியாத நிலை இருந்து வந்தது. [illegible] ரூபா 60 லட்சம் என மதிப்பிடப்பட்டிருந்தது; [illegible] பாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தனர்.

வவுனியா பால் கொள்வனவு நிலையத்துக்கு அடிக்கடி ஏற்படும் மின்சாரத் தடையை தவிர்க்கும் முகமாக 6 இலட்சம் ரூபா பெறுமதியான மின் உற்பத்தி இயந்திரத்தையும் மில்கோ நிறுவனம் வழங்கியுள்ளது;

கடந்தகால அசம்பாவிதங்[illegible] கொள்வனவு நிலையத்துக்கு [illegible] இதுவரை பால் தற்போது பால் பண்ணையாளர்களால் வழங்கப்பட்டு வருகிறது.

1984 ஆம் ஆண்டில் பெறப்பட்டுவந்த பாலின் அளவு மீண்டும் வர ஆரம்பித்துள்ளது

புதுக்குடியிருப்பு பால் பண்ணையாளர் சங்கம் மீண்டும் புத்துயிர் பெற்று மாங்குளம் பால் கொள்வனவு நிலையத்துக்கு பால் சேகரித்து அனுப்பி வருகிறது.

மேற்கண்ட தகவல்களை மாங்குளம் பால் கொள்வனவு நிலைய பொறுப்பதிகாரி உதயனுக்குத் தெரிவித்தார். (இ94)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரையோர 'ரோலர்' மீன்பிடிப்பால் சிறு தொழிலாளர்கள் பாதிப்பு

குருநகர். பெப், 7

ஆழ்கடல் மீன்பிடியில் ஈடு படுத்தப்படும் பாரிய இயந் திரப் படகுகள் கரையோரப் பகுதிகளில் 'ரோலர்' மடியைப்போட்டு மீன் பிடிப்ப தால் சிறுதொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்ற னர் என்று குருநகர் சிறுகு வலை கடற்தொழிலாளர் அபி விருத்திச் சங்கம், குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்கம் என்பனவற்றில் புகார் செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கடற் தொழில் அமைப்புகள் ஒன் றிணைந்து தற்போது நட வடிக்கை எடுத்துவருகின்றன.

சிறு தொழில் செய்யும் பகுதிகளில் ரோலர் மடி போட்டு மீன்பிடிப்பது தடை செய்யப்பட்டிருப்பதாக இந்த அமைப்புகள் பகிரங்க அறி வித்தல்மூலம் தெரிவித்துள் ளன. (இ-51)

## பயிற்சி வகுப்பு

மாவிட்டபுரம்' பெப் 7

மருதனுமடம் கோட்டக் கல்வி அலுவலக ஆதரவில் உடற்கல்விச் சேவைக்காலம் பயிற்சி வகுப்புக்கள் இம் மாதம் 13, 14 ஆகிய இரு தினங்களிலும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் நடைபெறும்.

மருதனுமடம் உதவிக் கல் விப் பணிப்பாளர் திரு' ஆர்: கே. குலசேகரம் இதனை அறி வித்துள்ளார்;

6 முதல் 11 ஆண்டுகள் உள்ள பாடசாலைகளில் இரு ந்து ஒரு ஆசிரியராவது பங்கு பற்றுவது அவசியம் என்றும் அவர் தெரிவித்தார் (இ-80)

## முகாம் மூடப்பட்டது

நெடுந்தீவில் நிலைகொண்டிருந்த இந்திய அமைதிப்படை யின் முகாம் மூடப்பட்டுவிட் டது.

நெடுந்தீவு மகாவித்தியால யத்தில் கடந்த இரண்டு மாதங்களாக அமைதிப்படை யினர் முகாமிட்டிருந்தனர். (க-11)

## அபிவிருத்தி சபைக்கூட்டம்

முல்லைத்தீவு, பெப் 7

முள்ளைத்தீவு மகாவித்தியா லய அபிவிருத்திச் சபையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 15 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்,

தலைவரும் அதிபருமான திரு. வே. சுப்பிரமணியம் (முல்லைமணி) தலைமையில் அது நடைபெறும். எனச் செய லாளர் திரு. சு: பொன்னு சுவாமி அறிவித்துள்ளார்,

# சிங்களவர்களுக்கு நாம் எதிரானவர்கள் அல்லர்

## புலிகள் பிரமுகர் உரை

சேமமடு. பெப் 7

நாம் சிங்கள இனத்தின் கலாசாரத்துக்கோ அல்லது மொழிக்கோ, பாரம்பரியங் களுக்கோ எதிரானவர்கள் அல்லர்.

வவுனியாக் கச்சேரியில் அரச ஊழியர்கள் மத்தியில் உரையாற்றிய விடுதலைப் புலி களின் வவுனியாப் பிரதேசத் தளபதி திரு தினேஸ் மேற் கண்டவாறு கூறினர்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு-கிழக்கு மாகாணங் கள் எமது பாரம்பரிய பிர தேசங்களாகும் பரம்பரை யாக அங்கு வாழ்ந்துவரும் சிங் கள மக்களுக்கு நாம் எதுவித தீங்கும் விளைவிக்கப்போவ தில்லை: நாம் ஆயுதங்களின் மீது தீரா மோகம் கொண்ட வர்களும் அல்லர்;

ஆனால் வடக்கு கிழக்கில் எமது அனுமதியின்றி நடக்கும் குடியேற்றத்தை நாம் வன் மையாக என்றும் எதிர்ப் போம்:

வவுனியாப் பிரதேசம் கல்வி யில் முன்னேறிய மாவட்டம் என்று சொல்ல முடியாது. அரச ஊழியர்கள் தம்மிடம் கல்வித்தன்மையைக் காட்டு தல் கூடாது.

அவர்களுக்கு இயன்றளவு உதவிகளைச் செய்யவேண்டும்.

எமது மொழி தமிழ்மொழி நாம் தமிழ் மொழியில் அலு வல்களைச் செய்ய வேண்டும். இது சம்பந்தமான கண் காணிப்பு எம்மால் மேற் கொள்ளப்படும்.

இவ்வாறு அவர் கூறினார். (இ-37)

## ஊக்குவிப்பு கடன்

மாங்குளம் பெப் 7

மாங்குளம் மக்கள் வங்கி படித்த இளைஞர்கள் யுவதி களுக்கு சுயதொழில் ஊக்கு விக்கு முகமாக பத்தாயிரம் ரூபாவுக்கு மேற்படாத ஊக்கு விப்புக் கடன் வழங்கி வரு கிறது

இவ்வங்கி மூலம் அதிக மானோர் வங்கி முகவர்களாக வும், நியமிக்கப்பட்டுள்ளனர்: (இ-94)


# விவசாய டிப்ளோமா
## (Diploma in Agriculture)

ஒரு வருடகால விவசாய டிப்ளோமா

இலவசப் பயிற்சி நெறி

**போதிக்கப்படும் பாடங்கள்:** மிருக பரிபாலனம், பயிர் வேளாண்மை, பூங்கனியியல், விவசாய மூலதத்துவங்கள், பண்ணை முகாமைத்துவம், கமப்பொறியியல் [ஆண்கள்], மனைப்பொருளியல் [பெண்கள்], ஆங்கிலம்;

**தகைமை:** க. பொ. த: [சாதாரணம்] அல்லது தே. க. பொ. த: பரீட்சை சித்தியடைந்திருப்பதுடன் 30- 04- 90இல் வயது 16 – 25 இடைப் பட்டிருக்க வேண்டும்.

✶ உதவு தொகை வழங்கப்படும்

✶ பெண்களுக்கு விடுதி வசதியளிக்கப்படும்

விருப்பமுள்ள இருபாலாரும்

அதிபர்
யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்
மருதனுமடம், சுன்னாகம்
என்ற விலாசத்திற்கு விண்ணப்பிக்கலாம்

விண்ணப்ப முடிவு திகதி: 02- 03- 90

Principal
Jaffna College Agricultural Institute
Maruthanamadam. Chunnakam.

(2439)



# புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி — யாழ்ப்பாணம்

★ மாணவர் கவனத்திற்கு:

1988 டிசம்பரில் நடைபெறவிருந்த B. A. பரீட்சை, 1989 ஏப்பிரலில் நடைபெறவிருந்த G.A.Q பரீட்சை என்பன ஏப்பிரல் முதல் பகுதியில் நடைபெறவிருப்பதால் இப் பரீட்சைக்கான 25 மணிநேர

மீட்டல் வினாவிடை வகுப்புக்கள்

10. 2. 1990 இல் ஆரம்பமாகின்றன.

இந் நிலையத்தில் பதிவு செய்த மாணவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும். ஏனைய மாணவர்களுக்கும் அனுமதிகள் வழங்கப்படும்.

விரிவுரையாளர்கள்

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | குமாரவேல் |
| தமிழ் | — | குழந்தை |
| புவியியல் | — | குணராஜா |
| தத்துவஇயல் | — | சஜந்தன் |
| இந்துநாகரீகம் | — | அருள்நங்கை |
| அரசியல் | — | குமார் |

G. A, Q 91 வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன)

[C/3765)



# T V TRAVELS & TOURIST

● சவூதி அரேபியா

1. Labourers
2. Tinkers
3. Plumbers
4. Mechanics
5. Technicians
6. Electricians
7. Ladies Cleaners

மற்றும் குவைற் (Kuwait) நாட்டிற்கு இப்மாதம் முடிவிற்குள் போவதற்கு ஒழுங்கு செய்து தரப்படும். அத்துடன் சிங்கப்பூர் நாட்டிற்கு வீட்டுப் பணிப்பெண்களுக்கும் தொழில்கள் பெற்றுத்தரப்படும்.

கலர்ப்படம் பாஸ்போட் சைஸ் "—" புகைப்படம் கடவுச்சீட்டுடன் எமது காரியாலயத்துடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.

(Front of Railway Station)
Brown Road,
KOKUVIL.

(C/3731)



# ★ முதலாவது ★ பிறந்ததின வாழ்த்து

செல்வன்

## செல்வக்குமரன் தம்பித்துரை

கிரிமலையைச் சேர்ந்த தம்பித்துரை தெய்வேந்திர ராணி தம்பதிகளின் செல்வப் புதல்வன் செல்வக்குமரன் தனது முதலாவது பிறந்தநினத்தை இன்று (7-2-90)ல் தமது இல்லத்தில் சிறப்பாக கொண்டாடுகிறார்: இவரை அப்பா, அம்மா, அக்காமார், அம்மம்மா, ஐயா, அம்மா, மாமாமார், அத்தைமார், பெரியப்பா மார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் கிரிமலை முத்து மாரி அம்பாள் அருள்பெற்று பல்லாண்டுகாலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்;

(2447)



# தேவை

எமது ஸ்தாபனத்திற்கு பெண் விற்பனைப் பிரதிநிதிகள் தேவை. பார்மஸி மருத்துவத் துறையில் முன் அனுபவம் வாய்ந்த பெண்கள் மட்டும் நேரில் விண்ணப்பிக்கவும்.

**Ratnam Pharmacy & Grocerey**
388, Hospital Road, Jaffna.

(2240)



# விக்னு டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்.

[O/L வகுப்புகளுக்கும் ஆண்டு 6 - 10 வகுப்புகளுக்கும் தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

பிரிவு 7 மீட்டல்

**O/L DAY CLASSES** (8.30 - 1.30

இறுதிப் பிரிவு 05 - 02 - 1990

**EVENING CLASSES** (Dec)

பிரிவு 3 [3.00 — 5.00]

ஆரம்பம்: 05 - 02 - 1990

இவ்வருட தூர இடத்து மாணவர்களின் நலன் கருதி சனி, ஞாயிறு பிரிவு

ஆரம்பம்: 18 - 02 - 1990

| | | | |
|---|---|---|---|
| விஞ்ஞானம்:- | 8 — 9 | கணிதம்:- | 9 — 10 |
| தமிழ்: | 10 — 11 | சமயம்:- | 11 — 12 |
| சமூகக்கல்வி:- | 12 — 1 | ஆங்கிலம்:- | 1 — 2 |

ஆண்டு 6, 7, 8, 9, 10 பிரிவு B

(A பிரிவுக்கு அனுமதிகள் நிறுத்தப்பட்டுள்ளது.)

ஆரம்பம்: 05 - 02 - 1990 (3.00 — 5.00)

i அனுபவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினரால் போதிக்கப்படும்
ii தவணைப் பரீட்சைகள் நடத்தி பெறுபேறுகள் தேர்ச்சி அறிக்கை மூலம் வழங்கப்படும்
iii கடமை, கட்டுப்பாட்டுடன் நடத்தும் ஒரே நிறுவனம்
iv விடுதி வசதிகள் செய்து கொடுக்கப்படும்

[வி-3748]



# கலை வர்த்தகக் கல்லூரி
## C. C. A

மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம்.
(வெலிங்டன் சந்தி அருகே)

DAY CLASS

A/L 90,

புதிய பிரிவு

| | | |
|---|---|---|
| பொருளியல் | - | வரதராஜன் |
| வர்த்தகம் | - | ரட்ணம் |
| கணக்கியல் | - | ஸ்ரீ |
| அளவையியல் | - | S. S. மனோகரன் |
| தமிழ் | - | குழந்தை |
| இந்துநாகரீகம் | - | கிருஷ்ணா |

ஆரம்பம்: 12- 02- 1990
திங்கள் 7. 00 A: M

மீட்டல் வினா - விடை வகுப்பு
(A/L 89 பரீட்சை எடுத்த மாணவர்களுக்கு)

ஆரம்பம்: 12- 02- 1990
திங்கள் 10. 00 A: M

G. A. Q - B. A வகுப்புகள்
ஆரம்பம்: 10- 02- 1990 சனி

(C/3769)



# ★ கம்பியூட்டர் கல்வி ★

● **Diploma In Data Processing and Computer Programming in BASIC Language**
ஆரம்பம்: 7 - Feb - 90 [திங்கள், புதன், வெள்ளி] நேரம் 12 a.m
10 - Feb - 90 [சனி, ஞாயிறு] நேரம் 9 a.m

● **Dbase III +**
ஆரம்பம்: 15 - Feb - 90 [செவ்வாய், வியாழன், வெள்ளி] நேரம் 9,30 a m
23 - Feb - 90 சனி, ஞாயிறு] நேரம் 10,30 a.m

● **Lotus 1 - 2 - 3**
ஆரம்பம்: 11 - Feb - 90 [ஞாயிறு] நேரம் 10 a.m

● **Word Processing**
ஆரம்பம்: 10 - Feb - 90

O/L படித்த இரு பாலாரும் சேரலாம்: மிகவும் விளக்கமான முறையில் பயிற்சி அளிக்கப்படும். பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்;

PRACTICALS ON IBM (Compatible Machines)

Join with us to study the latest Computer Technology




**UNIKCO COMPUTER CENTRE**
No. 5, Power House Road,
2 nd, Lane, JAFFNA.

[வி-3777]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணக் கல்வி நிலையம்

The Jaffna Education Centre

சாந்தி சினிமா முன்பாக மேல்மாடியில்

G. C. E. O/L (Paper Class
G. C. E. A/L Science and arts

Spoken English

Tamil and English Shorthand, Typing

I. A. B. வகுப்புக்கள் நடைபெறுகின்றன

புதிய பிரிவுகள்

10. 2. 90 ல் ஆரம்பமாகின்றன

(2449)


# கிழக்கு ஜேர்மனியில் தேர்தல் பிரசாரம்

# மேற்கு ஜேர்மன் ஜனாதிபதி நடத்துவார்

பொன், பெப் 6

கிழக்கு ஜேர்மனியில் சுதந்திர நாடாளுமன்றத் தேர்தல் வருகிற மார்ச் மாதம் நடைபெறவிருக்கிறது.

கடந்த வருடம் இறுதியில் மக்கள் எதிர்ப்பு காரணமாக கம்யூனிஸ்ட் அரசு அங்கு பதவி விலகியது.

ஜனநாயக தேர்தல் நடத்தப்படவேண்டும்; பலகட்சி அரசியல் முறை கொண்டுவரப்படவேண்டும். கம்யூனிசின் ஏகபோக அரசுரிமை ஒழிக்கப்படவேண்டும். — இக்கோரிக்கைகளை முன்வைத்து மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். அதற்குப்பணிந்து கம்யூனிஸ்ட் அரசு பதவி விலகியது.

இப்போது பல அரசியல் கட்சிகள் பங்குபற்றும் முதலாவது சுதந்திர தேர்தல் மார்ச் மாதம் நடைபெறவுள்ளது.

தனிடையில் – இரண்டு ஜேர்மனிகளும் இணைந்து ஒரு ஜேர்மனியாக வேண்டும் என்ற இருநாடுகளிலும் வலியுறுத்தப்பட்டுவருகிறது.

இதன் ஒரு கட்டமாக மேற்கு ஜேர்மனியின் ஆளும் கட்சியான கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சி, கிழக்கு ஜேர்மனில் உள்ள ஜேர்மன் சமூக யூனியன், புவேரிய கிறிஸ்தவ சமூக யூனியன் ஆகியவற்றுடன் சேர்ந்து 'Alliance for Germany' என்ற கட்சியை உருவாக்கியுள்ளனர்.

இக்கட்சியும் கிழக்கு ஜேர்மனியில் வருகிற மார்ச் தேர்தலில் போட்டியிட இருக்கிறது.

இக்கட்சிக்காக தேர்தல் பிரசாரம் செய்ய மேற்கு ஜேர்மன் ஜனாதிபதி ஹெல்மட் கிழக்கு ஜேர்மனுக்கு செல்ல இருக்கிறார்.

இது சம்பந்தமான உத்தியோகபூர்வ அறிவிப்பை திரு. கோல் நேற்று மேற்கு ஜேர்மன் தலைநகர் பொன்னில் வெளியிட்டார்.

இதேவேளை, மேற்கு ஜேர்மனில் உள்ள பிரதான எதிர்க்கட்சியான சமூக ஜனநாயகக் கட்சி கிழக்கு ஜேர்மனில் உள்ள சமூக ஜனநாயகக்கட்சியுடன் கூட்டுச்சேர்ந்துள்ளது. (எ)

## வெள்ளியன்று திருச்சியில் தி. மு. க. மாநில மாநாடு

சென்னை, பெப். 6

தி. மு. கவின் ஆறுவது மாநில மாநாடு திருச்சியில் வருகிற ஒன்பதாம் திகதி ஆரம்பமாகிறது.

மூன்று நாட்கள் நடைபெறும் இம் மாநாட்டிற்கு தி. மு. க. தலைவரும் முதலமைச்சருமான திரு. மு. கருணாநிதி தலைமை வகிக்கிறார்.

கல்வி அமைச்சரும் தி மு க. பொதுச்செயலாளருமான பேராசிரியர் க. அன்பழகன் மாநாட்டை ஆரம்பித்து வைக்கிறார்.

அரசியல் மாநாடு இறுதி நாளான 11ஆம் திகதி நடைபெறும்.

திருச்சி மாநாட்டை வெற்றியாக்க உதவிடுமாறு திரு கருணாநிதி 'முரசொலி' கடிதம் மூலம் தொண்டர்களுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கின்றார்.

கடிதத்தில் திரு. கருணாநிதி எழுதியிருப்பதாவது;

சோதனைகளில் புடம் போட்ட தங்கமாக ஒளி விடுகிறது தி மு க;

எமர்ஜென்ஸி நெருப்பில் எரிந்து போகாமல் இருப்புத் தூணாக எழுந்து நிற்கிறது தி. மு. க.

தோல்விகளால் முகம் சுளிக்காமல் விழுப்புண்களை கண்டு மகிழ்ந்து நடக்கிறது தி மு க

எப்படி முடிகிறது இந்தக் கழகத்தால் என்று வியப்புப் பெருமூச்சு விடுவோர் விஷமம் செய்து பார்க்கின்றனர் விஷம் கலக்கமுடியுமா என துடிக்கின்றனர்.

நமக்குள்ளே கலகமூட்ட 'நாரதர்' வேலை செய்து களைத்துப்போகின்றனர்.

"நாரதர் கலகம் நன்மையில முடியும்" என்று புராணங்கள் கூறும் இந்த நயவஞ்சகரோ நம் கழகம் வீழ்ந்திடக் கலகம் செய்து திரிகின்றனர்.

நடந்து முடிந்த ஆண்டுகளில் மட்டுமல்ல, இனித் தழ்ந்து வரும் புது ஆண்டுகளில் கூட அந்த நச்சுப்பல் நாகங்கள் நம்மைத் தீண்டப் படமெடுக்கும். எச்சரிக்கையுடன் இருக்கும் இந்தக் கழகம் என்பதை எதிர்காலத்திலும் மெய்ப்பிக்கப் போகிறோம்.

— இப்படி திரு கருணாநிதி தெரிவித்திருக்கிறார். (உ-எ)

### வெளிநாடுகளில் நடிகை மனோரமா இசைக்கச்சேரி

சென்னை, பெப் 6

நடிகை மனோரமா இசை நிகழ்ச்சி நடத்துவதற்காக பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி, சுவிட்சர்லந்து, நோர்வே ஆகிய நாடுகளில் சுற்றுப்பயணம் ஒன்றை மேற்கொள்கிறார்.

வருகிற மாதம் 24 ஆம் திகதி அவரது சுற்றுப்பயணம் ஆரம்பமாகிறது. ஏப்ரல் 3 ஆம் திகதி திருமதி மனோரமா நாடு திரும்புவார். (எ)

## 'பத்மபூஷண்' விருதை உதறிய பத்திராதிபர்!

இந்திய குடியரசு தினத்தை ஒட்டி ஜனாதிபதி வெங்கட்ராமன் வழங்கிய பத்மபூஷன் விருது, தனக்கு வேண்டாம் என்று பிரபல பத்திரிகையாளரான நிகில் சக்கரவர்த்தி நிராகரித்துவிட்டார்.

திரு. சக்கரவர்த்தி 'மெயின் ஸ்ரீம்' வாரப்பத்திரிகையின் ஆசிரியர் ஆவார்.

பத்திரிகையாளர்கள் இவ் விருதுகளை ஏற்பதை நான் எதிர்த்து வந்திருப்பதாக அவர் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதம் ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

'இந்து' பத்திரிகையின் துணையாசிரியர் திரு. என். ஸ்ரீராமுக்கும் 'பத்மபூஷண்' விருது ஜனாதிபதியினால் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (எ)


★ திறப்பு விழா அழைப்பிதழ் ★

இன்று (07-02-1990) காலை 7.30 க்கு ஆரம்பித்து வைக்கப்பட விருக்கும் எமது நிறுவனத்தின் திறப்பு விழாவில் உங்கள் நல்வரவையும், பேராதரவையும் நாடிநிற்கிறோம்.

Raagaa Vision

AUDIO RECORDING

(From the original Sound Track)

42 A, Kachcheri, Nallur Road, Jaffna.

(2354)



## அறிவித்தல்

25-01-90இல் K K S. றோட் யாழ்ப்பாணம் கந்தப்பிள்ளை கடையில் எனது புதிய சயிக்கிள் (H309759) Bagஇல் பரிசுத்த வேதா மற்றும் காற்கோபுரம் சிற்றேடுகள் தொழில் பற்றுவரவுப் புத்தகம் பற்று சீட்டுக்கள் காணாமல் போய்விட்டது எடுத்தவர் தயவு செய்து தந்துதவும்படி பணிவன்புடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

செ. தர்மகுலசிங்கம் (ஐயர் கோன்)
கண்ணன் லொட்ஜ்
பரமேஸ்வராச் சந்தி, யாழ்ப்பாணம்.

(2248)



# Jaffna College Institute of Technology

Vaddukoddai.

Full Time Technical Educational Offering Following Facilities

★ Fully Equipped Laboratories
★ Hostel Facilities for Male & Female Students
★ Library
★ Sport, Games, & Cultural Activites

பின்வரும் தொழில் நுட்ப பயிற்சி நெறிகள்
March 1990 ஆரம்பமாகின்றன:

1. TECHNICIAN DIPLOMA COURSES [ஆங்கில மூலம்]
NDI தராதரத்திற்கேற்பவும் City & Guids (London) பாட நெறிகளுக்கேற்பவும் அமைக்கப்பட்டது
i) Electronics & Communication
ii) Mechanical Engineering
iii) Electrical Engineering
iv) Civil Engineering (2 Years)
● கல்வித்தகைமை: G. C. E. (O/L) கணிதம், விஞ்ஞானம் இரண்டிலும் திறமைச்சித்தி உட்பட 6 பாடங்களில் சித்தி.
● காலம்: 3 வருடங்கள்

2. ADVANCED DIPLOMA IN-COMPUTING [ஆங்கில மூலம்]
Syllabus includes British Computer Society (B. C. S) Part I and Australian Computer Society (A. C. S) examinations
● கல்வித்தகைமை: G. C. E (O/L) 5 subjects including Maths & English & G. C. E. (A/L) one subject.
● Duration: One Year

3. ENGINEERING COURSE
Full time preparing students for E. C. E (London) Part I & II exams.
Week end courses could be arranged
Qualification: G. C. E. (A/L) Maths with 3 passes
Lectures. Practicals by qualified engineers.

4. DIPLOMA COURSES [ஆங்கில மூலம்]
i) Draughtsmanship (Civil)
ii) Computer Programming & Data Processing
BASIC, COBOL & dBASE III PLUS)
Practicals on I. B. M. PC, AT & MAT 386
Industrial Controller
● கல்வித்தகைமை: G C E (O/L) கணிதம், விஞ்ஞானம் இரண்டிலும் திறமைச்சித்தி உட்பட 6 பாடங்களில் சித்தி.
● காலம்: ONE YEAR

5. TECHNICIAN CERTIFICATE COURSES [ஆங்கில மூலம்]
i) Radio & T. V. Servicing
ii) Automobile Technology
● கல்வித்தகைமை: G. C. E (O/L) with MATHS & SCIENCE
● காலம்: ONE YEAR

முக்கிய குறிப்பு : நிறுவன அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய விண்ணப்பப் பத்திரங்களில் மட்டுமே விண்ணப்பிக்கவும்; விண்ணப்பப் பத்திரங்களை ரூபா 5/- செலுத்தி நேரடியாகவோ அல்லது 1/- பெறுமதியான ஆறு முத்திரைகளை அனுப்பி தபால் மூலமாகவோ பெற்றுக்கொள்ளலாம்.

INTERVIEWS Feb: 26, 27, 28

விண்ணப்ப முடிவு திகதி: 25-2-90
SELECTION AFTER INTERVIEW

பணிப்பாளர்

[வி-3780]



# PATRICIAN INSTITUTES

தொழினுட்ப பயிற்சி நெறிகள்

★ புதிய பிரிவுகள் ஆரம்பம் ★

1. Computer Processing Courses

I. Word Processing
Duration — 3 Months

II. Lotus 123/ Spread Sheet Analysis
Duration — 3 Months
Commencing — 12 - 02 - 1990
Weekday Classes (Theory & Practicals)
Lecturers:- Miss. M. Varatharajah, Management Accountant Passed Finalist — C. I. M. A. (Lond)
and
Mr. R. N. Varendran A. C. A.

III. Basic Language and Disk Operating System
Duration — 3 Months
Weekend Classes — Commencing — 10 - 02 - 1990
Weekdays Classes — Commencing — 12 - 02 - 1990
Lecturers:- Mr. N. Sundrarajah B. Sc. (Eng) Hons (U. K.) M. C. S
and
Mr. S. R. Logendra. D. C. A. (Systems Analyst)
Epuipment used:- LASER XT/s. XT/s. 386 (I B M Compatibles) and Apple II Computers

பின்வரும் பயிற்சி நெறிகள் எதிர்வரும் 12-02-1990 திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும்.

2. SHORTHAND AND TYPING — சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் — 3 மாத கால பயிற்சி
3. ELECTTICAL WIRING — மின்சார இணைப்பு — 3 மாத கால பயிற்சி
4. MOTOR MECHANISM — மோட்டார் மெக்கானிசம் — 6 மாத கால பயிற்சி
5. MOTOR WINDING — மோட்டார் வைண்டிங் — 3 மாத கால பயிற்சி
6. LATHE OPERATION — கடைச்சல் இயந்திர இயக்கம் — 3 மாத கால பயிற்சி
7. ARC WELDING — மின் ஒட்டு வேலை — 3 மாத கால பயிற்சி

● மேற்படி பயிற்சி நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்ப படிவத்தை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் கட்டணங்கள் தவணை அடிப்படையில் செலுத்தலாம்.

மேலதிக விபரங்கட்கு:

Registrar

PATRICIAN INSTITUTE OF HIGHER STUDIES

59, ST. PATRICK'S ROAD, JAFFNA.

[C-8782]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடன் அழைக்கின்றது

**ஆர்த்தி ஜுவல்லர்ஸ்**

★ நாமமான வர்ண நிழற்படப் பிரதி ஒன்று 5/50 நெக்கட்டிவ் (Processing) செய்தல் இலவசம்;
★ விற்பனை வர்ண நிழற்படச் சுருள்கள் Kodak, Fulji Konica Tudor Fort B/W

பெற்றுக்கொள்ள நாடுங்கள்



# உதயன்

7-02-1990 புதன்கிழமை

எம்மிடம் வர்ண நிழற்படப் பிரதி... பிரதியாக்கம் செய்பவர்களுக்கு வர்ண நிழற்படச் சுருள்கள போட்டோ அல்பங்கள் இலவசமு

மேலதிக விபரங்களுக்கு

**ஆர்த்தி ஜுவல்லர்ஸ்**

111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## காலை 10 மணிக்கே கடைகள் திறக்கப்படும்

### சட்டமூலம் நிறைவேறியது

கொழும்பு, பெப். 7

கடைகளைத் திறந்து மூடும் புதிய நேர அட்டவணை சட்ட மூலம் நேற்று நாடாளுமன் றத்தில் நிறைவேற்றப்பட்டது

இச்சட்டத்தின்படி இனி மேல் கடைகள் காலை 10 மணிக்கு திறக்கப்பட்டு இரவு 10 மணிக்கு மூடப்படவேண்டும்.

ஆனால் கடைகளை எந்த நேரத்திலும் மூட கடை உரிமையாளர்களுக்கு சட்டத்தில் இடமளிக்கப்பட்டிருக்கிறது;

எனினும் கடைகள் காலை 10 மணிக்கே திறக்கப்பட வேண்டும்.

சட்டமூலத்தை பிரதமர் டி. பி. விஜேதுங்க சமர்ப்பித்துப் பேசுகையில், காலை நேர போக்குவரத்து நெருக்கடியைச் சமாளிக்கவே இந்த நேரமாற்றம் என்று சொன்னார்: இம்மாற்றத்தினால் அரசு ஊழியருடன் மாணவரும் பயனடைவர் என்றும் பிரதமர் வலியுறுத்தினர்.

துணை அமைச்சர் ஹறோல்ட் ஹேரத் பேசுகையில், 8 மணி நேரத்துக்கு மேலதிகமாக பணிபுரியும் ஊழியருக்கு மேலதிக ஊதியம் வழங்கப்பட வேண்டும் என்றார். (இ-எ)

## மக்கள் நலன் கருதி செயற்பட வர்த்தகர்களுக்கு அறிவுறுத்தல்

### புதிய நெறிமுறைகள் குறித்து புலிகள் விளக்கம்

குருநகர், பெப். 7

''நிறை குறைவு, கலப்படம் போன்ற தில்லுமுல்லுகளை அகற்றுவதற்கு உடனடியாக வர்த்தகர்கள் முன்வர வேண்டும். சிவில் நிர்வாகம் இல்லை என்ற எண்ணத்தில் தாம் எண்ணிய நிலையில் நடந்து கொள்ளும் வர்த்தகர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க நேரிடும்.''

நேற்று மாலை 5-30 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற ஆட்டோ - டாக்ஸி உரிமையாளர், வர்த்தகர்கள் ஆகியோருடனான சந்திப்பின் போது தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் அமைப்பாளர் திரு. ஸ்டான்லி டொமினிக் இவ்வாறு கருத்து வெளியிட்டார்.

விடுதலைப் புலிகள் தரப்பில் திரு. ஆஞ்சநேயர் தலைமை வகித்தார். வர்த்தகர்கள் சார்பில் திரு. கே. கே. ஏ. கந்தையாபிள்ளை தலைமை வகித்தார்.

திரு. ஸ்டான்லி டொமினிக் தொடர்ந்து கூறியதாவது:-

''பொது மக்களைப் பாதிக்காத விதத்தில் வர்த்தகர்கள் நடந்து கொள்ள வேண்டும். கீழ்வரும் விடயங்களில் வர்த்தகர்கள் இன்று முதல் கண்டிப்பாக நடந்து கொள்ள வேண்டப்படுகிறார்கள்--

1. விலைக் கட்டுப்பாடு;
2. நிறை;
3. ஊழியர்களின் வேதனம்;
4. கலப்படம்;
5. நேரம்;
6. கடைகள் வாரத்தில் ஒன்றரை நாட்கள் பூட்டப்பட வேண்டும்.
7. சாப்பாடு, தேனீர்க் கடைகள் சுத்தம் பேணப்பட வேண்டும் இதனைப் பார்வையிடக் குழுவொன்று நியமிக்கப்பட்டிருக்கிறது.
8. வயிற்றோட்ட நோய்க்குக் காரணமான விடயங்களை சாப்பாட்டுக் கடைக்காரர்கள் கவனித்து அகற்ற வேண்டும்;
9. சுகாதாரத் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்படாத கால்நடைகள் இறைச்சிக்காக வெட்டப்படக்கூடாது;
10. சட்ட விரோத இறைச்சிக் கடைகள் உடனடியாக மூடப்பட வேண்டும்.
11. வாழைப்பழக் கடை என்ற தோரணையில் சாராயம் விற்பது நிறுத்தப்பட வேண்டும்;
12. விலைப் பட்டியல் வைக்கப்பட வேண்டும்.
13. காலங்கடந்த மருந்து வகைகள் விற்பனை செய்யக் கூடாது;
14. பதுக்கல் செய்யக் கூடாது;
15. டாக்ஸி, ஓட்டோக்கள் மீட்டர் இன்மையால் நினைத்த மாத்திரத்தில் கட்டணம் அறவிடுவது கைவிட வேண்டும்.

இந்த அறிவித்தல்கள் முதல் தடவையாக மீறப்படுகின்றன என்ற நிலையில் பார்க்கப்பட மாட்டாது;

இக்கட்டான நிலையில் மனிதாபிமானத்தைக் கடைப்பிடிக்க வர்த்தகர்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

வாகனங்கள் ஒழுங்கு விதிகளைக் கடைப்பிடித்து செலுத்த வாகன சாரதிகள் முன்வர வேண்டும்.

வாகனங்களின் மேல் பிரயாணிகளை ஏற்றிச் செல்வது இம்மாதம் 5ஆம் திகதியுடன் நிறுத்தப்பட்டுள்ளது.

இவற்றைத் தேசிய உணர்வுடன் ஒவ்வொருவரும் கடைப்பிடித்தால் சட்டம், ஒழுங்கு என்பன எமக்கு இன்னொரு சக்தியால் திணிக்கப்படவேண்டிய தேவை இல்லாமல் போய்விடும்' என்றார்.

கலந்துரையாடலில் பெருந்தொகையான வர்த்தகர்கள், டாக்ஸி, ஓட்டோ சாரதிகள் கலந்துகொண்டனர்; அவர்கள் தந்தமது முறைபாடுகளையும் எடுத்துக் கூறினர்.

வர்த்தகர்கள் சார்பில் பேசிய ஜனுப் கே. எம். எம். ஹமீட் கூறியதாவது:-

'புலிகள் காட்டுக்குள் இருந்து கட்டளை இட்டதை யாழ் வர்த்தகர்கள் நிறைவேற்றியவர்கள்.

இதனை இந்திய அமைதிப் படையினரே எம்மிடம் கூறி எமது தேவைகளைப் புறக்கணித்தார்கள். வர்த்தகர்களுக்கு அவகாசம் வழங்கப்படும் பட்சத்தில் நிச்சயம் பொதுமக்களுக்கு அவர்கள் நல்ல சேவையை வழங்குவார்கள் என்று நம்பலாம்' என்றார்.

## தொலைபேசிக் கம்பி திருடுவோருக்கு எச்சரிக்கை

யாழ்ப்பாணம், பெப் 7

தொலைபேசிக் கம்பிகளைத் திருடும் முயற்சியில் ஈடுபடுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அறிவித்துள்ளது.

யாழ்நகரை அண்டிய பகுதிகளில் தொலைத்தொடர்பு திணைக்களத்தினால் 100 தொலைபேசி இணைப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன;

இவை தற்பொழுது அத்தியாவசிய தேவைகட்கு பயன்படுத்தப்பட்டு வரும் வேளையில்—

சில விஷமிகளினால் தொலைபேசிக் கம்பிகள் திருடப்பட்டு வருகின்றன;

தொலைபேசிக் கம்பிகளைத் திருடுவோர் ஆயிரக்கணக்கான ரூபா பெறுமதியான அவற்றைச் சில நூறு ரூபாவுக்கு விற்கின்றார்கள் இது கண்டிக்கப்படுவதுடன் தண்டிக்கப்படக் கூடிய குற்றமாகும்;

எனவே இவ் விஷமிகளுக்கு நாம் கடுமையான எச்சரிக்கை விடுவதுடன் இந்த திருட்டு சம்பந்தமான தகவல்களையும் எமக்குத் தந்துதவும்படி பொதுமக்களை கேட்டுக் கொள்கிறோம்— என்று விடுதலைப்புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது; (அ-9)

## ஜனசவிய குடும்பங்களுக்கு முதல் கட்ட கடன் வசதி

### நேற்றைய மாநாட்டில் ஆராய்வு

யாழ்ப்பாணம், பெப். 7

யாழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் ஜனசவிய திட்டத்தில் கீழ் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு சுயவேலைவாய்ப்பு அளிக்கும் நோக்கில் கடன்வசதிகளை வழங்கும் நடவடிக்கை ஆரம்பமாகியுள்ளது;

இதுபற்றிய ஆலோசனைக் கூட்டம் ஒன்று நேற்றுக்காலை யாழ் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெற்றது;

கூட்டத்தில் யாழ் உதவி அரசாங்க அதிபர் மற்றும் யாழ் மாவட்ட திட்டமிடல் உதவிப் பணிப்பாளர், மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்;

இதன் முதற்கட்டமாக கொழும்புத்துறை, பொம்மைவெளி, செம்மாதெரு, குருநகர் ஆகிய பகுதிகளில் உள்ள ஜனசவிய குடும்பங்களைத் தெரிவுசெய்து சுயவேலைவாய்ப்புக்கான கடன்களை வழங்க கூட்டத்தில் திட்டமிடப்பட்டது;

இந்த இடங்களிலுள்ள ஜனசவிய குடும்பங்களை யாழ் மாவட்ட திட்டமிடல் உதவிப் பணிப்பாளரும், உதவி அரசாங்க அதிபரும், மக்கள் வங்கி அதிகாரிகளும் சந்திக்க உள்ளனர்.

10ஆம் திகதி கொழும்புத்துறைக்கும், 11ஆம் திகதி செம்மாதெரு, பொம்மைவெளிப் பகுதிக்கும் 16ஆம் திகதி குருநகர்ப் பகுதிக்கும் விஜயஞ்செய்து கடன் வசதி பெறக்கூடிய குடும்பங்களை இவர்கள் தெரிவு செய்வார்கள்; (இ-9)

## மகளிர் கல்லூரி மாணவி சாதனை

கொழும்பு, பெப் 7

ஐந்தாம் ஆண்டுக்கான புலமைப் பரீட்சையில் தமிழ்மொழி மூலமான பிரிவில் உடுவில் மகளிர் கல்லூரி மாணவியான செல்வி பி. மகிளமணிக்கு இரண்டாவது இடம் கிடைத்தது.

இவருக்கு 187 புள்ளிகள் கிடைத்தன;

முதலாம் இடத்தை கல்முனை அல்பஹாரியா வித்தியாலய மாணவன் ஏ. ஆர். றிஸாட்ரம் பெற்றார். இவருக்கு 188 புள்ளிகள் கிடைத்தன.

மூன்றாவது இடம் 186 புள்ளிகளைப் பெற்ற கண்டி கனிஷ்ட மகளிர் மகாவித்தியாலய மாணவன் வை. பாலநேசனுக்குக் கிடைத்தது.

தமிழ்ப் பிரிவில் 2,587 பேர் புலமைப் பரீட்சையில் சித்தி எய்தினர். இவர்களில் 1,065 பேருக்கு நிதி உதவி கிடைக்கும்; (இ-எ)

## அடகு நகை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இப்போது பரிசீலிக்கப்படுகிறது.

அடகு வைத்த தமது நகைகளை மீளப்பெறுவதற்கான பணம் செலுத்தியவர்களில் இன்னமும் 18 ஆயிரம்பேரின் நகைகள் வழங்கப்படவில்லை என்றும் அதே அதிகாரி தெரிவித்தார் (அ-9)

## தமிழ் தேசிய...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று மாலை தெரிவித்தது:

தமிழ்த் தேசிய கவுன்ஸிலில் மூன்று ஈழத்தமிழ் அமைப்புக்கள் அங்கம் வகித்தன அவற்றில் ஒன்று ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கம் ஆகும்:

ஈ. பி. ஆர். எல். எப். பிரமுகர் திரு. ரவிசங்கர் மேலும் சொன்னதாவது:

எமது இயக்கம் தனது எதிர்கால நடவடிக்கை பற்றி தானே முடிவெடுக்கும் அதற்காகவே தமிழ் தேசியக் கவுன்ஸிலில் இருந்து எமது இயக்கம் விலகியுள்ளது;

எமது இயக்கம் தனிப்பட்ட திறனுடன் இலங்கை அரசுடன் பேச்சுக்களை நடத்தும்: இப்படி அவர் தெரிவித்தார் (இ-எ)

## தமிழக....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நெருக்கமாக சோதனை நிலையங்களை (Check points) அமைத்தல்;

— இவை தமிழக அரசினால் எடுக்கப்பட்டுள்ள முன் எச்சரிக்கை நடவடிக்கைகளில் சில என அந்தத் தகவலில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது;

தமிழகத்தில் அண்மைக் காலத்தில் ஆயுதங்களைப்பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட பல வன்செயல் சம்பவங்கள் குறித்தும் —

அண்மையில் மண்டபம் பகுதியில் பெருமளவு ஆயுதங்கள் புதைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது பற்றியும் அத்தகவலில் மேலும் விவரிக்கப்பட்டிருந்தது. (உ-ஓ)

## இந்திய- பாக்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சாட்டை இந்தியா நேற்று மாலை நிராகரித்தது.

அதைத் தொடர்ந்து புதுடில்லியில் உள்ள பாகிஸ்தான் தூதர் இந்திய வெளிவிவகார அமைச்சுக்கு அழைக்கப்பட்டார்: இந்திய அரசின் கண்டனமும் கவலையும் அவருக்கு இந்திய அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டது;

இதே போல இஸ்லாமபாத்தில் உள்ள இந்தியத்தூதர் திரு. ஜே. என். டிக்ஸிற்றும் பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சினால் அழைக்கப்பட்டார்: காஷ்மீர் தகராறில் இந்திய தரப்பினர் நடந்து கொள்ளும் முறை பற்றி திரு டிக்ஸிற்றிடம் ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டது

### பிரதமர் விளக்கம்

இதேவேளை இந்திய வெளியுறவு அமைச்சின் நாடாளுமன்ற ஆலோசனைக் கூட்டம் நேற்று முன்தினம் பிரதமர் திரு. வி. பி. சிங் தலைமையில் நடைபெற்ற போது இது தொடர்பாக இந்தியாவின் உறுதியான நிலைபற்றி திரு. சிங் உறுப்பினர்களுக்கு எடுத்துக் கூறினர்.

காஷ்மீரில் குழப்பத்தை ஏற்படுத்தவதில் ஈடுபட்டிருக்கும் பாகிஸ்தானுக்குச் சரியான பாடம் படிப்பிக்கவேண்டும் என்று உறுப்பினர்கள் பலர் அங்கு தெரிவித்தனர்;

காஷ்மீர், இந்தியாவில் இருந்து பிரிக்க முடியாத ஒரு பகுதி என்று கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

காஷ்மீர் பற்றிய இந்திய நிலைக்கு சோவியத் யூனியனின் மனப்பூர்வமான ஆதரவு கிடைத்துள்ளது என்று பிரதமர் திரு. வி. பி. சிங் குழுக் கூட்டத்தில் சொன்னார்;

### குஜ்ரால் கருத்து

இதேசமயம்; காஷ்மீர் பிரச்சினை குறித்து பாகிஸ்தானுடன் போர் தொடுக்கும் எண்ணம் இந்தியாவிற்கு இல்லை என்று வெளியுறவுச் செயலாளர் இந்தர் குமார் குஜ்ரால் தெரிவித்துள்ளார்:

செய்தியாளர்கள் மத்தியில் பேசுகையில், இந்தியா மீது ஒரு போர் திணிக்கப்படுமானால் அதனை சமாளிக்கும் வல்லமை இந்தியப்படைகளிடம் உள்ளது என்றும் உறுதியாக அவர் சொன்னார்;

இதனிடையில்- காஷ்மீரில் வெளிச்சக்திகள் தலையிடுவதை குவைத்நாடு கண்டித்திருக்கிறது மதத்தின் பேரால் பிரிவினை கோருவதைக் கண்டிப்பதாக குவைத் வெளியுறவு அமைச்சர் தன்னைச் சந்தித்த இந்தியப் பிரதிநிதிகளிடம் தெரிவித்தார்.

இந்திய, பாகிஸ்தான் படை பலம் பற்றிய விவரம் வருமாறு:-

**இந்தியா**

மொத்த ஆயுதப்படையினர்: 13 லட்சத்து 62 ஆயிரம்

இராணுவம்: 12 லட்சம்

கடற்படை: 52 ஆயிரம்

விமானப்படை: 1 லட்சத்து 15 ஆயிரம்

கடல் - விமானப்படை: 2 ஆயிரம்

ரிஸேர்வ் இராணுவம்: 2 லட்சம்

பிரதேச இராணுவம்: 40 ஆயிரம்

மத்திய ரிஸேர்வ் பொலீஸ்: 90 ஆயிரம்

எல்லைப்பாதுகாப்புப் படை: 90 ஆயிரம்

அஸாம் ரைபிள் படை: 40 ஆயிரம்

**பாகிஸ்தான்**

மொத்த ஆயுதப் படையினர்: 4 லட்சத்து 80 ஆயிரத்து 600

இராணுவம்: 4 லட்சத்து 50 ஆயிரம்

கடற்படை: 16 ஆயிரம்

விமானப்படை: 17 ஆயிரத்து 600

பரா இராணுவம்: 75 ஆயிரம்

எல்லைத்துருப்புக்கள்: 65 ஆயிரம்

றேஞ்சர்ஸ்: 15 ஆயிரம்

தொண்டர் இராணுவம்: 7 ஆயிரம்

காஷ்மீர் மாநிலத்தில் யுத்த நிறுத்த எல்லைக் கோடு 755 மைல வரை செல்கிறது.

காஷ்மீர் ஜனத்தொகை 70 லட்சம். அதில் ... வீதமானோர் முஸ்லிம்கள்.

## புனர்வாழ்வு மாநாடு

வடக்கு, கிழக்கு மாகாண புனர்வாழ்வு நெறிப்படுத்தல் குழு மாநாடு எதிர்வரும் 10 ஆம் திகதி முதலமைச்சர் திரு அ. வரதராஜப் பெருமாள் தலைமையில் திருமலை எலிபன்ட் ஹவுஸ் மண்டபத்தில் நடைபெறும்

மாகாண நிதியமைச்சர் திரு பெரியதம்பி கிருபாகரன், விவசாய, புனர்வாழ்வு அமைச்சர் திரு. பா. இராசரத்தினம், மற்றும் மாகாண அமைச்சின் அதிகாரிகள், மாவட்ட ஆணையாளர்கள் (அரசாங்க அதிபர்) திணைக்களத் தலைவர்கள் கலந்துகொள்வார்கள்;

வடக்கு, கிழக்கில் இவ்வாண்டை அபிவிருத்தி ஆண்டாக மாகாண அரசு பிரகடனப்படுத்தி யுள்ளது. இதனால் இவ்வாண்டு வடக்கு கிழக்கின் எட்டு மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்படவுள்ள அனைத்து புனர் நிர்மாணப் பணிகளின் திட்டங்கள் குறித்த இந்த மாநாட்டில் ஆராயப்பட்டு முடிவெடுக்கப்படுமென்று மாகாண புனர்வாழ்வு திட்ட இணைப்பாளர் திரு பூ. சங்காரவேல் தெரிவித்தார்;

## தொலைபேசிச் சேவைகள் சீர் செய்யப்படவேண்டும்

### புனரமைப்புக் கூட்டத்தில்வலியுறுத்து

யாழ்ப்பாணம், பெப் 7

யாழ்ப்பாணத்தில் தொலைபேசிச் சேவை சீரில்லாத காரணத்தால் புனர்வாழ்வுவேலைகள் தாமதமடைகின்றன; ஆகவே தொலைத்தொடர்பு திணைக்களம் துரிதமாக வேலைகளை மேற்கொண்டு தொலைபேசிச் சேவையை சீர்செய்ய வேண்டும்;

யாழ்- அரசாங்க செயலகத்தில் நேற்றுக்காலை நடந்த மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்புக் கூட்டத்தில் மேற்கண்டவாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.

யாழ் பதில் அரசாங்க அதிபர் திரு. கே. மாணிக்கவாசகர் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் யாழ் மாவட்டத்தில் உள்ள பல்வேறு திணைக்களங்களைச் சேர்ந்த அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

இந்த ஆண்டுக்கான வேலைத்திட்டங்கள் சம்பந்தமாகவும் கடந்த வருட வேலைகளின் முன்னேற்றம் பெறாத வேலைகள் சம்பந்தமாகவும் நிவாரண விடயங்கள் குறித்தும் மாநாட்டில் ஆராயப்பட்டது. (இ-8)

## கிழக்கில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆட்டிகல ஆகியோர் இந்தப் பேச்சுக்களில் பங்குபற்றினர்,

விடுதலைப் புலிகளின் தரப்பில் டாக்டர் அன்டன் பாலசிங்கம் திரு. யோகி ஆகியோர் கலந்துகொண்டனர்:

பேச்சுவார்த்தையின் பின் கருத்து வெளியிடுகையில் திரு. யோகி கூறியதாவது:-

ஸ்ரீலங்கா அரசும் விடுதலைப் புலிகளும் தொடர்ந்தும் பேச்சுவார்த்தையின் அடிப்படையில் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண உறுதி பூண்டிருக்கிறார்கள்;

இரு தரப்பினருக்கும் இடையில் கிழக்கில் முறுகல் நிலை ஏற்பட்டிருப்பதாகக் கூறுவது முற்றிலும் தவறு

புரிந்துணர்வின் அடிப்படையிலேயே எந்தக் கருத்து வேறுபாடும் தீர்க்கப்படும். மோதலின் அடிப்படையில் அல்ல.

இல்லாத விடயத்தை யாரும் பெரிதுபடுத்தத் தேவையில்லை — என்றார் (உ)

## மீண்டும் இயங்கும்

யாழ்ப்பாணம், பெப் 7

வடமராட்சி திக்கம் வடிசாராய சாலை எதிர்வரும் 16 ஆம் திகதியில் இருந்து இயங்கவிருக்கிறது:

பனை அபிவிருத்திச் சபையினால் நிருவகிக்கப்பட்ட இந்த வடிசாராய சாலை 1987 வன்செயலின் போது சேதமாக்கப்பட்டது;

இந்த வடிசாராய சாலை 40 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு இயங்க இருக்கிறது ( -3)

## மரண அறிவித்தல்கள்

### சட்டத்தரணி வ மயில்வாகனம்

அராலி வடக்கைச் சேர்ந்த சட்டத்தரணி திரு. வ. மயில்வாகனம் 06-02-1990 செவ்வாய்க்கிழமை காலமானார்; அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்பு அறிவிக்கப்படும்,

தகவல்:
வே கந்தர் மயில்வாகனம்
(இளைப்பாறிய தலைமை ஆசிரியர்,)

அராலி வடக்கு,
அராலி;

(1962)

### வதிரி சைவப்புலவர் திரு. சி. வல்லிபுரம் (ஆசிரியர்)

வதிரி சைவப்புலவர் திரு. சி. வல்லிபுரம் ஆசிரியர் அவர்கள் கடந்த 29/01/90 திங்கட்கிழமை காலை 11.45 மணியளவில் இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் பூதவுடல் 29/01/90 திங்கட்கிழமை இரவு 8.00 மணியளவில் வதிரி ஆலங்கட்டை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது; இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், மாணக்கர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்

தகவல்:
மனைவி, பிள்ளைகள்

திருவள்ளுவர் அகம்,
கரவெட்டி வடக்கு,
கரவெட்டி;

(2451)

## தவறிவிட்டது

இம்மாதம் 3-ம் திகதி பி. ப. 5—6 மணிக்கிடையில் யாழ்ப்பாணத்திலிருந்து ஆனைக்கோட்டைக்குச் செல்லும் வழியில் 5 பவுண் எடையுள்ள தாலிக்கொடி தவறிவிட்டது; இதைக் கண்டெடுத்தவர்கள் கீழ் குறிப்பிட்ட விலாசத்திற்கு கொடுத்து உதவவும்; தகுந்த சன்மானம் வழங்கப்படும்;

C/o. S. Sanmuganathan,
17/27, PandarakulamWest Lane, Nallur.

(1961)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 898/8 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 07 - 02 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org